கொங்கேயம்

V2. No.10. 7 Lomm 1929

M28KY
N29.216
189045

KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளி வரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 2.] 1929 வரு மார்ச்சு மீ 7உ [No. 10.

OFFICE OF THE ... MADRAS 1929

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 181
2. எமாங்கதத் திளவரசன் (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L. 183
3. வில்லி பாரத விளக்கம் T. S. நடராஜப் பிள்ளை B.A., B.L. 185
4 அப்பர் E.N. தணிகாசலமுதலியார் B. A., B. L. 187
5. தமிழ்ப் பாடம் 190
6. சீர்திருத்தம், (By Emerson) K. இராஜ கோபாலன் 193
7. "நோக்'கெனும் பாசம" V. நாராயணன் M.A., M.L. 195
8. வர்த்தமானம் 199

சந்தாதாரராய்ச் சேர விரும்புவோர் எந்தத் தேதியிலிருந்து சேரலாமானாலும் கட்டுரைகள் பல தொடர்ச்சியாய் வருவதால் முன்னிதழ்களையும் பெற்றுக்கொள்வது நலம். வி. பி யில் அனுப்பச் சொல்வதைக் காட்டிலும், தொகையை மணியார்டர் செய்வதால் செலவு குறையும். ஸிங்கப்பூர் பினங்கு தென்னாப்பிரிக்கா முதலிய புறநாடுகளுக்கு வி. பி யில் அனுப்ப இயலாது. மானேஜர்.

கலா நிலயம்

கலைகளே கதி.

III

18045

ஆதலின், நாம் இதுகாறும் உலகமுன்னேற்றத்திற்கென்று தற்காலம் முயல்வனவாகின்ற இயக்கங்கள் எண்ணிய பயனை அளிப்பதில்லை யென்பதைக் காட்டிக்கொண்டு வந்தோம். பயன் இவை அளிப்பதில்லை என்று எல்லோருக்கும் எளிதில் காணக்கிடக்கின்ற முடிவை எடுத்துக் காட்டியதோடு மாத்திரம் அமையாது, இவை அளிக்க இயலாது என்பதையும், அவ்வியலாமைக்குக் காரணங்களையும் கூறினோம். இவ்வியக்கங்கள் இவை கருதிய பலன்களை அளிக்காமல் நிற்பது இவைகளைக் கையாளும் முறைகளிலும் மனிதர்களிலும் உள்ள குறைகளால் நேர்கின்றது என்று எண்ணுவது பிழை. இது பிழை என்பதை உணரும் நுண்ணறிவு இன்மையாற்றான் ஜனங்கள் கட்சித் தலைவர்களையும் கட்சி முறைகளையும் அடிக்கடி மாற்றிப் பார்க்கின்றனர். இப்படி மாற்றுவதால் ஏற்படக்கூடிய சில தீமைகள் எஞ்சுகின்றனவேயன்றி நன்மையென்பதோ நகத்தளவும் எட்டுவதில்லை. ஆதலால், கலாநிலயம் மிகவும் வினயமாக வேண்டிக் கொள்வது இது:—"அன்பர்காள், பயனிருக்கும் திசையையும் பாராத இவ்வியக்கங்களில் கொன்னே நாம் காலத்தைக் கழிப்பானேன்! பயனின்மை என்ற வரையில் நில்லாது சில இயக்கங்கள் நல்லோ ரஞ்சத்தக்க வகையில் தீமையாகவே முடிகின்ற செய்தியை இந்நாள் நாம் காணவில்லையா! அதுவுமன்றி, அரசியல் வாதங்களில் மாத்திரமேயல்லாது, மற்று எவ்வகைப் 'பிரசாரங்களிலும்' பொய்யும் பகையும் கடவுளுக்குமுன் கணக்குக்காட்டுதற்கு அடுக்காத செயல்களும் நிறைந்திருக்கின்றன வென்பது நிச்சயம். இப்படிப்பட்டவைகளில் அறிஞர்களா யிருப்பவர்கள் தம் காலத்தையும் கருத்தையும் சிலர் கைப்பொருளையும் செலவு செய்து, பயனற்றனவைகளைத் தாம் பாராட்டிக்கொண்டு விவகரிப்பதுமன்றித் தமக்குத் துணையாகச் சேர்த்துக்கொள்ளவேண்டுவது இன்றியமையாததா யிருக்கின்ற எண்ணிறந்த பொது ஜனங்களின் காலத்தையும் கவனத்தையும் வீணாக்க முயல்வது நியாயமாகுமா! ஆதலின், வேறு வழி ஒன்று உளதோஎனக் காண்பது நம் கடன். ஆன்றோர் உரைகளுக்கும், நமது யுக்திக்கும், உலகத்தின் அனுபவத்திற்கும் ஒத்ததாய வழியொன்று நம்மை உய்விக்க உளது. அதுதான் கலையின் நெறி. இது புதியதுமன்று. இக்காலத்து அறியாமையால் பழையதென்று கழித்துவிட்டதில் இக்கலையுமொன்று. கலை வேறு கடவுள் வேறு அன்று என்று நாம் முதலிலிருந்துசொல்லிவந்ததை நிலைநிறுத்தவோ இந்நாட் சிலர் கலையைக் கழித்தவர் கடவுளையும் அக்கடவுளின் சின்னங்களையும் கழிக்க வேண்டுகின்றனர்! மற்றெல்லாம் சற்றே மறந்து, அக்கலையெனுந் தொல்லுணர்வு ஒன்றே மாந்தரை உய்ய இயக்கி வைக்குமாறு சிலகாலம் செய்துதான் பார்த்தல் என்! எனின், எங்கெங்கும் அன்பாய், யாவர்க்கும் நட்பாய், இன்முகமும் நன்மொழியும்

N742.18

யாவரும் வழங்க, வறுமைக்கு நிலமின்றித் தீமைக்கு நோக்கமின்றி அவைதம் இனத்தோடுந் தீர்ந்தகல,ஒவ்வொருகுடியும் ஒவ்வோர் ஊரும் நாடும் வாழ்வதை நம்முடைய காலத்திலேயே காணக்கூடியவராவோம். இது சரதம். "குழந்தாய், இதுவே கடைசிக்கவளம், இனி இல்லை, இனி இல்லை" என்றென்றியம்பித் தன் மகவிற்குச் சோறூட்டும் தாயின்பால் காணலாகும் இவ்வஞ்சனையனைய வஞ்சனைகளேயே அக்காலம் நாம் காணலாகும்.

ஆனால் ஒன்று: கலையின் நெறியால் நாம் வாழ்வு எய்த நினைக்கின்றோம் என்றியம்புமளவிலே, வாழ்வு என்பது இன்னது என நிச்சயமாய்த் துணிந்து கொளல்வேண்டும். சேரவேண்டிய இடம் எத்தகைய தென்பதைச் செவ்வையாக உணராது, செல்கின்ற நெறியின் வாய்மையை நம்பும்படி செய்வது இயல்வதொன்றன்று. இதற்கு நாம் முன், கவி இரவீந்திர நாதர் அவர் ஸ்ரீ அரவிந்தரைத் தரிசித்தபோது தமக்குண்டாய எண்ணங்களை வெளியிட்டதிலடங்கிய தம் பொருள் செறிந்த உரைகளைப் பின்பற்றி அவைகளை விளக்கும் முகத்தால் சென்ற ஆண்டு ஜூலை 5உ முதல் ஆகஸ்டு 16உ வரை, "சொல்வோரிற் கேட்பவ ரருமை" என்றதலைப்போடு எழுதிய ஏழு தலையங்கங்களில், தக்க கவனஞ் செலுத்தியிருக்கின்றோம். "நித்தியத்தின் ஹிருதயத்தில் வாழ்கின்றவர்களே வாய்மையாக வாழ்கின்றவராவார்கள்" என்று இரவீந்திரர் வாழ்வின் இலக்கணத்தை வகுத்தார். அத் தலையங்கங்கள் ஏழும் பல்வேறு வகைகளில் இவ்விலக்கணத்தின் உண்மையை எடுத்துக்காட்டவும் விளக்கவும் முயன்ற முயற்சியாம்.

நித்தியத்தின் ஹிருதயத்தில் வாழ்கின்ற வாழ்வைத் தம் நோக்கமாகக்கூட உடையன வல்லவாகையால், இந்நாள் ஜனங்களின் நன்மைக்காகச் செய்யப்படுகின்ற முயற்சிகள்யாவும் பாதகம் செய்கின்றன.மற்று இத்தகைய மெய்வாழ்வை நோக்கமாகக் கொண்டாலும்கொள்ளாவிட்டாலும் இத்தகையவாழ்வுஎய்தியே தீரும்படி செய்வன கலைகள்தாம் என்று நாம் சொல்ல வருகையில், 'கற்றவர் பலர் கயவராயிருக்கின்றதைக் காண்கின்றோமே!' எனின், 'கல்வி நல்வாழ்வு வாழ்விக்காமல் தீராது என எவ்வாறு கூறலாம்?" என்ற ஐயம் பிறப்பது இயற்கையே.

உண்மை யாதெனில், கற்றவர் யாவரும் கயவராய் இருக்கின்றாரிலர். நாம் மெய்க்கல்வியின் தன்மை இன்னதென்பதை நன்கு அறிவோமாயினும், பொய்யுடையோர் எண்ணிறந்தோர் ஒன்றுகூடிக் கூவும் கூக்குரலுக்கு இடையே அதனைச் சிறிது அயர்ந்து கயவர்கள் சிலரைக் கற்றவர்களென்று மதித்துவிடுகின்றோம். இங்கிலீஷ் பேசத் தெரிந்ததாலேயே, வடமொழி வாக்கியங்கள் உரைக்கக்கூடிய சாமர்த்தியத்தினாலேயே, தொல்காப்பியச் சூத்திரம் பலவும் மனப்பாடமா யிருப்பதாலேயே எவனுங் கற்றவன் என்று கருதற் கேற்றவ னாகமாட்டான். "பெற்றோர் கற்றல்" (வால். 1. பக்கம் 321.); "புத்தகம் போற்றல்" (வால் 1 பக்கம் 341) என்ற அவ்விரண்டு தலையங்கங்களில் கற்றவர் என்று விவகரிப்பவர்தம் தன்மையையும் நிலையையும் ஒரு சிறிது குறிப்புணர்த்தி யிருக்கின்றோம். ஆனால், இச் சமயத்தில் முக்கியமாக மனத்திற்கொள்ளவேண்டிய விஷயங்கள்யாவும், "கலாநிலயம் செய்யும் கருமமும் செயல் வகையும்" என நாம் முதலிலேயே (வால்யூம் 1. பக்கம். 21, 41, 61, 81, 101, 121, 141, 161, 181.) வரைந்துள்ள ஒன்பது தலையங்கங்களில் அடங்கியிருக்கின்றன. அவற்றிலும் சிறப்பாக, இப்பாகத்திற்கு வேண்டுவனயாவும் 61-வது பக்கத்திலுள்ள தலையங்கத்தில் காணலாகும். அதனில், தெரிவுநூல்களையும், அறிவு நூல்களையும், கருவி நூல்களையும் பயின்றுள்ளவர்களைக் கற்றவர்கள்என்று சொல்லப்படா தென்பதற்குக் காரணம் காட்டியிருக்கின்றோம். தற்காலம், அவரவர் பெற்றுளபட்டங்களாலும் செய்கின்ற தொழில்களாலும் கற்றவர் என்று கருதப்படுபவர்களில் பெரும்பான்மையோர் நமது பாகுபாட்டின்படி அப்பெயருக்கு உரியவராக மாட்டார் என்பது அத்தலையங்கத்தால் விளங்கும். அந்தத் தலையங்கங்களில் நாம் செப்பியவண்ணம் கலைகளின் தோற்றங்களாய காவியம் முதலியன பயில்வாரிடை "இழிதகை நடத்தை" யொன்றும், பழிபடு சொல் ஒன்றும் ஒழுங்கிலா நினைவொன்றும் காண இயலாதென்று நிச்சயமாய்க் கூறலாம். ஆனால், இன்னொரு இரகசியத்தை மறத்தல் கூடாது: கவிகளின் நூல்களிலே பயின்றிருப்போன் ஒருவன் அதனைத் தன் வயிற்றின் வளர்ப்பிற்காகப் பயன்படுத்திக்கொள்ளத் தலைப்படுவானாயின், அவன் அன்று முதல் கல்வி கற்பானல்லன்; கல்வியை வியாபாரஞ் செய்கின்றவனாகின்றான். எனவே, வியாபாரத்திற்கு உரிய இழுக்குகள் ஒன்றிரண்டு அவன்பால் கண்டக்கால், அவற்றைக்கல்வியின்குற்றமாகக்கருதவேண்டா. அதுவுமன்றி, இக்காவியங்களையும் நாடோறும் மேன்மேலும் இன்பம் பெருக ஓதிக்கொண்டே இருப்பவரைத்தாம் கல்வியுடையார் என்று கூறலாமே யல்லாது, கற்றாய்விட்ட தெனப் புத்தகங்களை மூடிவிட்டால், அன்று முதல் அவர்கள் கல்வியில்லாதவர்களே ஆகின்றார்கள்.

இத்தகைய இலக்கணங்களைக் கருத்திற்கொண்டு ஆராய்ந்தால், கல்வியும் இழுக்குடைய ஒழுக்கமும் சேர்ந்திருக்கக் காணவே மாட்டோம்.

OFFICE OF THE REG... 1929 MADRAS

ஏமாங்கதத் திளவரசன்

[By Kind Permission of Messrs. B. G. PAUL & Co., Madras.]

167 பக்கத் தொடர்ச்சி

புவிக்கரசு ஆகவேண்டு மென்று புஜங்கன் உழன்ற அவ்வேமாங்கத நாட்டில் கவிக்கரசு ஆகவேண்டு மென்று ஆசைகொண்ட ஒருவனும் இருந்தான். அவனுக்குச் சாபாலன் என்று அமைந்திருந்த பெயர் இடுகுறியோ காரணமோ தெரிந்ததில்லை.

அவனது பூர்வசரித்திரம் ஒருவேளை ஆட்டுமந்தையில் ஆரம்பித்ததோ யாதோ! அப்பெயர்கொண்ட உபநிடதத்தறிவினால் அவனுக்கு அப்பெயர் வந்தது அன்றென்பது ஒருதலை. அறிவிற்கும் சாபாலனுக்கும் வெகுதூரம். கவித்திறமும் வெகு அற்பமே. ஆசிரியன் ஒருவனையடுத்து வெகு காலம் அவன் ஓபாது பாடம் கேட்டதுண்டு. ஐந்திலக்கணமும் சுவைபற்ற சில இலக்கியங்களும் பாடம் கேட்டவரையில் விரித்தியுடன் அவனுக்கு மனப்பாடமா யிருந்தன. கேட்ட பாடத்திற்குமேல் ஓர் ஏடும் அவன் தானாகப் படித்திரான். படிக்கக்கூடும் என்று எண்ணினது மில்லை. மனோபாவமேனும் கற்பனா சக்தியேனும் அவனுக்கு எள்ளளவும் வாய்த்தில. செருக்கு ஒன்றே சாபாலனுக்குச் சித்தித் திருந்தது. 'இலக்கணச் சிகாமணி சாபாலப் புலவர்' என்றே தன்னை யெவர்க்கும் அறிமுகம் செய்தருளுவான் அவன்.

காலவளவிலே அச்சிகாமணிக்குக் கவிபாட வேண்டு மென்னும் ஆசையும் உண்டாயிற்று. துரிதமும் விஸ்தாரமும் அவனுடன் பிறந்தவை. விருப்பு என்று ஆரம்பித்துவிட்டால் பருப்புச் செருப்புநெருப்பு என எதுகை தாமே ஓடிவரக் கவிக்குக் கங்கேது கரையேது? காக்கைப்புராண மென்றொரு புராணம் கோடிக்கணக்கான பாசுரங்களால் பாடிமுடித்துவிட்டான் போர்போன்ற மிகுதியில் மாத்திரமன்றி அப்புராணம் பெரும்பான்மை சுவையிலும் அவ்வளவே. விஞ்சிய சிறுபான்மை கைக்கும். இல்லாதது ஒன்று போகாது எனும் உண்மையால் அப்புலவனது புகழ் அழிந்திலது. ஆனால் அவன் பெயரை மாத்திரம் 'இலக்கணச் சிகாமணி, இலக்கிய மகாகவி, சாபாலப் புலவனார்' என்று தானே வளர்த்துக் கொண்டான்.

அந்தக் கவிவாணன் வாய்க்கு முன் செய்த தீவினையால்இரையான அணியும் உவமையணி யொன்றே. அதுவும் வெகு சாதாரணம். தாமரை போன்ற கண், அன்னம்போன்ற நடை, காவிக்கல்போலச் சிவந்தகை எனும் இவைதமக்கு விஞ்சியதொரு புதுமை அவன் உவமைகளில் அமைந்திலது. அப்படி யேதேனும் ஒன்றிரண்டு நேர்ந்து விடுமாயின், அவை அசாதாரணத்துடன் நிற்காமல், அசம்பாவிதமும் ஆகிவிடும். உபமானத்திற்கும் உபமேயத்திற்கும் எந்த வகையிலும் பொருத்த மில்லாப் புதுமை சிற்சில உவமைகளில் காணலாம். காக்கைப் புராணத்தில் பாட்டுடைத் தலைமைபூண்ட காகம் சிரித்த தென்று சொல்லவரும் ஒருசெய்யுள்,"நாயெனக் காகமும் நகைத்த தன்றே" என்று முடிகின்றது. மோனையைக் கருதியே நகைப்பதற்கு உவமை நாய் ஆயிற்று.

இவ்வளவு சிறப்புவாய்ந்த அக்கவிஞனுக்குச் செவி கொடுப்பாரில்லை. காக்கைப் புராணத்தைக் கர்த்தபக் கூட்டத்திலன்றி அரங்கேற்றினால் அது சுவைக்குமோ! படாத பாடுபட்டு இப்புராணத்தைப் படிப்பவரைத் தேடித்தேடிச் சாபாலனுக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது. "என்ன மதியற்றது இவ்வுலகம்! என்னருங்கவிகளின் நயம் கண்டு கொண்டாடுவார் இலரே! குருடன் காதிலே சங்கு ஊதினது போலவோ என்புராணம் முடிதல் வேண்டும்?" என்று வருந்தி வந்தான். அவனுக்கும் தன் பாசுரங்களின் பெருமை மதிக்கப்படாமல் இருந்ததற்குக் காரணம், 'வீட்டைப்போல்' ஒரு நாள் வெளிச்சமாயிற்று. ஆகி, "ஏழையின் பேச்சு, ஓகோ! அம்பலம் ஏறாது. பட்டமும் புகழும் முதலிலே பெற்றுவிட்டால் பிறகு எல்லாரும் என் புராணத்தை ஓதுவார்; ஓதுவிப்பார். ஆதலால் நான்முதல்முதல் கவிச்சக்கரவர்த்திஎன்னும் நாமம் படைக்கவேண்டும். அது பெறுது விடேன்," எனத் துணிந்தான். வழிதான் தெரியவில்லை. எதிர்ந்தோரை எல்லாம், 'கவிச்சக்கரவர்த்தி ஆவது எப்படி? என்று வினவிவந்தான். இப்படி வினவியவர்களில் ஒருவம்பன்,"பரணிபாடுவாயானால் கவிச்சக்கரவர்த்தி யாவாய்," எனப் பகர்ந்து போயினன்.

பரணி பாடுவதென்றால், படையெழுச்சி, போர்புரிதல்,களம்காண்டல்,பேய்க்கூத்து,கூழ்அடுதல் முதலிய அங்கங்களை வருணிக்க வேண்டுமே! மனோபாவமென்பது தினையளவும் பெற்றிரா அப்புன்கவிக்குக் கண்ணால் காணாதனவற்றை எங்ஙனம் வரைதல்கூடும்! கற்பனா சக்தியாம் காற்று அவன் இருந்த திசையிலும் அடித்ததில்லை. ஆதலால், இந்நிகழ்ச்சிகளை ஒருமுறை நேராகப் பார்த்துவிட்டுப் பின்னரே பரணி பாடுவதென்று நிச்சயித்தான். போர் ஒன்றும் ஏமாங்கத நாட்டில் விளையாமலே நெடுங்காலம் தீர்ந்தது. பரணி பாடாமலே,கவிச்சக்கரவர்த்தியும் ஆகாமலே,தன்வாழ்நாளும் வாயசப் புராணமும் வறிதே கழிந்து போய் விடுமோ எனும் அச்சம் எய்தினான். 'நானிருக்குமிடம் போர் வாராமற்போனால், போரிருக்கு மிடம் நான் போவேன்,' என்று மதித்து, அயல் நாடுகள் புகுந்து, போர்தேடித் திரியலாயினான். திரிந்து அவன் சென்ற தேயங்கள் பல. அவனால் துன்பம் உற்ற மன்னர் பலர். போர் காணச் சென்றான் எனினும், சென்றவிடத்தில் தன் பெருமையையும் நாட்டிவிட்டு வர எண்ணி, அவ்வவ் வேந்தர் சபைகளுக்குப் போய், அவன் சேர்வதுண்டு. கற்றோர்க்குத் தன் தேயத்தில் இல்லாமற் போனாலும் சென்ற இடத்திலேனும் சிறப்புண்டோ என்று காணக்கருதினன் போலும்! சான்றோருடைய ஏமாங்கதத்திலிருந்து வந்தானிவன் என்னும் ஆசையால் அம்மன்னரும் அவையுளோரும் பரிவுடன் வரவேற்று அவனுக்கு ஆதரவு செய்வர். ஆனால், அப்புலவன் ஆக்கிய நூல் காக்கைப் புராணம் என்று அதன் பெயரைக் கேட்டவுடன் கதுமெனக் கலங்கி ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பவராவர். பிறகு கடவுள் வணக்கச்செய்யுள் வாசித்தபோது அன்னோர் பொருளறிந்திலரேனும்,அதன் தத்துவார்த்தம் ஏதோ இருக்க வேண்டுமென்று சிந்தித்திடுவர். அதன் பின்,

கோபாலனென்றொருகோமகனுனிரைகாத்தான்
பூபாலர்களும்புவிதனைப்புரந்திடுவார்கள்

மாபாலமொன்றினைமரத்தினிலிட்டதேயென்னச்
*சாபாலனுமொருகட்டுரைசாற்றுவதெவனோ.**

என்று அவையடக்கச் செய்யுள் தொடரும். உண்மையில் அவையடக்கச் செய்யுள் என்றால் அப்பெயர் இந்தச் செய்யுளுக்குத்தான் தகும். அடிக்கும் அடிக்கும் ஓர் இயைபும் தெரியாமல், பெரிய மரப்பாலம் ஒன்று புகுந்த விதமும் அறியாமல், அந்த மரப்பாலத்தைப்போல் சாபாலனது கட்டுரை ஆனவகையும் உணராமல் திகைக்க, அச்சபையிலுள்ளவர்களின் ஐம்பொறிகளும் அப்படியே அடங்கிவிடும். அவைக்குத்தான் அடங்குவதுபோகச் சாபாலன் இப்படி அவையைத்தான் அடக்கிவிடுவான். சுவாசமும் அடக்கி வெகு கவனமாய்த் தன் கவிகளைக் கேட்கின்றனர் என்று மகிழ்ந்து அப்புராணத்தின் கதை நிகழ்ந்த தேசத்தின் நீர்வளம் நிலவளம் இவைகளையுரைக்க இனி ஆரம்பம் செய்வன். நீர் வளத்திற்கு ஆதாரமாய் இருப்பது மழை. மழைக்குக் காரணம் மேகம். வேனில் காலத்தில் வெண்மையாய் இருந்த மேகங்கள் கடல் நீர் குடித்துக் கார் காலத்தில் கரு நிறத்தோடு மீண்டன என்பதை உவமை வாயிலாக உரைக்கப் புகுந்த அப்புலவன், தனது நாட்டில் 'சுண்ணும்படித்த சுவர்போல் வெண்மேகம் சென்று, வரும்போது அடுப்பின் உட்புறம் போன்று கறுத்து வந்தது,' என்று கேட்டவர் காதும் மனமும் கசக்கக் கசக்கச் சொல்வான். வந்த மேகமும், 'கரம்புத் தரையில் காய்ந்து நின்ற புல்லைப்போல் மழைத்தாரை பெய்தது,'' என்றவுடன் யார்தான் சகிப்பார்! எனினும், அம்மன்னர் தம் பதவிக்குரிய பெருந்தன்மையால், இகழ்ச்சி தோன்ற ஒன்றும் கூறாது, "புலவ, மேல் வருந்தேல். தாலீபுலாக நியாயத்தால் உன் புராணப் பெருமை உணர்ந்தோம்,'' என்றவனை ஒப்பித்துப் பொன்னும் தந்து போக்குவர். சாபாலனும் உபசாரமாக, "அரசே, என் கவிதை மகிழ்ந்து இத்தனை பொன் தந்த உன் வண்மைக்கு வந்திக்க உரையில்லேன். பனைமரம் போல் நீ பழுதிலாது வாழ்க,'' என்று வாழ்த்தி அகல்வான். ஒய்ந்தால் போதும் என்னும் சலிப்பினலும், தம்மிடத்தும் தம்போன்ற பிறவேந்தரிடத்தும் மீண்டும் சென்று இப்புன்கவிகளைப் பாடித் துன்பம் விளைக்காவண்ணம் அவனுசையடங்கப் பொன் தந்தனர் அம்மன்னர் எனும் நுட்பத்தை நுனிக்கும் அறிவு அப்பேதைப் புலவனுக்கு ஏது!

இன்னவாறு பாமகள் பணிமேற்பூண்டு யாத்திரை புரிந்த சாபாலன்தான் ஈராண்டுகளுக்குமுன் கடார நாடும் போய்ச் சேர்ந்தவன். தூமகேது தோன்றியது என்று ஓராமல் சபையுள் வரவிடுத்த புவனேசுவர வேந்தன் முன்னும் முறைப்படியே சாபாலன் காக்கைப் புராணத்தைக் கரையத் தொடங்கினன். கரம்பில் காய்ந்து நின்ற புல்போல் பெய்த மழை முனிவர் இட்ட சாபம்போல் ஆறுய்க்கூடப் பெருகியது. உண்பவர்க்குத் தானும் உணவாய் மற்ற உணவும் விளைவித்துத்தரும் உத்தம மழையைப் பெரியோர் இட்ட சாபத்திற்கு நேராகச் சொல்லியது கேட்ட ஆலவாய் அய்யனர் மூர்ச்சனையடைந்து பீடத்தில் ஒடுங்கினர். குலகுரு பலதேவர் இப்பாவம் தீரக் காயத்திரி மகாமந்திரத்தை ஓதினர். சரபசூரன் வாளிருக்கும் இடம் தேடினன். பார்த்திபனும் மந்திரியைப் பார்த்து, 'நிர்க்கதியடைந்த என்னை இக்கயவனின்றுங் காவாயோ?' என்பான்போல் நோக்கினன். கொற்றவனுக்கு உற்ற இடுக்கணை விலக்கஎண்ணிய குணபாலன், "ஐய,புலவ, நின்துணை யொரு கவி யாம் இதுகாறும் கண்டிலம். உனதுநாடும்ஏமாங்கதமென்று புகல்கின்றாய். எனின், வேண்டியவாறு பொருள் கொடுத்து உன்னைத் தன் அவைவிட்டகலாமல் போற்றாது அம்மன்னன் பிற நாடுகளுக்குப் போகவிடுத்ததேன்? நீயின்றி அவன் நகருமே பொலிவிழந் திருக்குமே!'' என்று வினவினன். வஞ்சப்புகழ்ச்சி இது வென்பது தெரிந்து அச்சபையிலுள்ளோர் தேக்குகின்ற தம் சிரிப்பைத் தடுக்கமாட்டாமல் வாய்விட்டுச் சிரித்துவிட்டனர். சாபாலனுக்குச் சிரிப்பின் இரகசியம் தெரியாவிடினும் சினம் மூண்டது. மற்றத் தேயங்களில் அவனுக்குப் பொன் தந்தனரே யன்றிப் பல்லைத் திறந்திலர். "புயலைப்போல் பொழியும் ஏமாங்கதத் தரசன் சிங்கமுகத் தாதிபனது வண்மையை இகழ்கின்றீர் போலும்!'' எனச் சாபாலன் வெகுள, "அச்சிங்கம் பெய்த மழைதான் வித்தகன் வைத வசைபோல் பெருகி உன்னை யிங்கு அடித்துக்கொண்டு மண்டி ஒதுக்கி விட்டது போலும்!'' என்று ஆத்தானகவி எதிர் விளம்பினன். மறுபடி புவனேசுவரன்முதல் காவற்சேவகர்வரை எல்லோரும் கொல்லென நகைக்க லாயினர். நாற்றிசையும் நோக்கினன் சாபாலன்: "எனதுகவியின் இன்பத்தை நுகரும் ஆற்றல் இங்கெவர்க்கும் இல்லை. காகக் கூட்டத்தில் பட்ட கூகை எனலாயினேன்!'' என்று கையற்றான். "ஆயின், கூகையீர் போம்,'' என்று சாற்றினன் சரபசூரன். "போய், ஒரு கூகைப் புராணமும் பாடிவிடும்,'' எனப் பலதேவர் கூடச் சிறிது நகைத்தார். கடார மன்னவன் கையிரண்டினும் அவனுக்குப் பொன் அள்ளிக் கொடுத்து, "ஏ, புலவா, இதைச் சுமந்து செல்! இந்நாடு இருக்கும் திசையைக் கூட இனி நினைவினில் வைக்காது போ,''என உரப்பினன். பொன்னை வாங்கிக்கொண்டான் சாபாலன். ஆனல், போகக் கருதவில்லை. ஆதலால் குணபாலன் காவலாட்களைக் கூப்பிட்டு, "இக்கோட்டான் வாயிற்படிக்கு வழிதெரியாமல் விழிக்கின்றது. இழுத்துப்போய் வெளிப்புறம் விடுங்கள்,'' என்று விதித்தான். அவர்களும் அரசனது கண் மறைகின்றவரையில் மெல்லவே அழைத்துச் சென்று, பின் கழுத்தைப் பிடித்து உந்திப் போய் வீதியில் சேர்த்தனர். சேர்த்ததும் ஒருவன், "ஏ, புலவா, உனக்கு அரசன் அளித்தபொருளை எங்களுக்குக் கொடுத்துவிடு. உன் நன்மையைக் கருதியே சொல்கின்றோம். நின் கவியை மகிழ்ந்து அரசன் உனக்கு இப்பொன் தந்ததில்லை. ஆறலைக்கும் கள்வர் இந்தப் பொன்னுக்காக உன் உயிரையும் பறித்தொழிக்கட்டும் என்று எமனையே நின் மடியில் கட்டி வழியனுப்பி இருக்கின்றான். பேசாமல் அதை எங்களுக்குக் கொடுத்துவிட்டால், உயிராவது பிழைப்பாய்,'' எனக் கேட்க, மற்றவன், "இந்தச்சனியன் தொட்ட காசை நாம் தீண்டவும் வேண்டா. ஏ, கவிராயா, வேந்தன் உனக்கு இத்தனை தனம் தந்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கின்றது: அஃது அந்தச் சுவடியின் தகனச் செலவிற்காக என்பதை நினை. கள்வருக்குத் தப்பினலும் இதை மறந்து பணத்தை வீண் செலவு செய்திடாதே,'' என்றெள் சாபாலனைச் நையப் புடைத்துத் துரத்தி விட்டான்.

மடியிலே பொன்னும் முதுகிலே புண்ணுமாய்க் கடாரம் நீத்துப்போந்த சாபாலன், பின்னது பெருகுமென்னும் அச்சமின்றி முன்னதை வளர்க்கநினைத்து வேறுள பல தேசங்கள் நாடி எங்கெங்கும் அவனையும்அவன்பாடிய நூலையும் செல்லாக்காசுபோல் எல்லாரும் கையுதிர்க்கொள்ளச் சிந்தைநொந்து ஏமாங்கதம்திரும்பும்போது, கவிச்சக்கரவர்த்தி யாதல்வேண்டிச் செய்த பிரயாணத்தினல் தனக்குண்டான இலாப நட்டங்களைப் பன்முறை கணக்கிட்டுப் பார்ப்பதால் தோன்றிய பலதிறப்பட்ட எண்ணங்களே மாறிமாறி அவனுக்கு வழித்துணையாயின. எனினும், மானநட்டத்தையாவது பண இலாபத்தையாவது அவன் பெரியதாய்க் கருதினனல்லன். காடார நாடு ஒன்று தவிர வேறெங்கும் அவனை வெளிப்படையாய், அவனது புத்தியிலும் படும்வரையில், அவமதித்திலர். ஆதலால், புவனேசுவரனது சபையமர்ந்தோர் அறிவின்மையேயன்றித் தன் புலமையின் குறையன்று அவர் மதியாததற்குக் காரணம் என்னும் சமாதானம் அவனுக்கு வெகு எளிதில் தேறுதல் அளித்தது. பொன்னசை அவனுக்கு மிகுதியும் உண்டு. எனினும், அவன் புகுந்த இடம் எதனிலும் போர் ஒன்று விளைந்து பரணி பாடுவதற்குச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையாதலால், கவிச்சக்கரவர்த்தியாகக் காலம் தாழ்க்கும் இந்தக்குறையையே ஆற்றமுடியாத குறையாகக் கருதினன். கசடர்களுக்கு வஞ்சினம் அதிகம். கடாரத்தில் உற்ற இகழ்ச்சியும் பரணி பாடுவதற்கில்லாக் குறையும் கலக்கப் பேயெண்ணம் ஒன்று அவன் மனத்தில் பிறந்தது. "அந்தத் தீய வேந்தனும் அவனது அவைக்களத்திலிருந்தோரும், என்னைப் புலவனென்று மதியாது; கோட்டானென்றும் சாபமென்றும் நிந்தித்துத் துரத்தினர்களல்லவோ! சிறுதொழில் பூண்ட சேவகனும்கூட இச்சுவடியைக் கொளுத்திவிடச் சொல்லினன். இந்தப்பழியை எப்படியாவது தீர்க்காது அமைவேனோ!.........எந்த வழியில் தீர்க்கலாம்?......என், வசை பாடினலோ?.....பயனில்லை......அவன்காதிற்கு எட்டாது.......எட்டினலும் அக்கயவர் கூட்டம் சிரிக்கத்தான் செய்யும்...எனதூர் சேர்ந்தவுடன் சிங்கமுகனைக் கண்டு, புவனேசுவரன் அவனுக்கே நிந்தனை இழைத்தானென்று சொல்லிவிட்டாலோ! எமதரசன் பிறர் எவரையும் நிந்தியான்; பிறரெவரும் தன்னை நிந்திக்கவும் சகியான். ஆகையால், இவ்வசைக்கு மாறாகச் சமரம் புரிந்து, என்னைச் சிரித்திகழ்ந்த கடாரத்தவனது வாயைக்கிழித்தெறிவானென்பதற்கு ஐயமில்லை. ஓகோகோ! இன்றுன்று மறந்தேனே! எனக்குற்ற பழியைக் கழிப்பதுடன் போரும் ஒன்று இதனல் நேரும்! நேரும்! பரணி பாடுவேன், பாடுவேன்! கவிச்சக்கரவர்த்தியும் நானே, நானே! எல்லாமொரு நன்மைக்கே யென்பர். அதனுண்மை இப்பொழுதல்லவோ அனுபவத்தில் தெரிகின்றது! கடாரன் திட்டிய திட்டிலிருந்து கவிச்சக்கரவர்த்தியாகின்றேன் பார். ஆகா! எந்தவேளையில் அந்த நாட்டினில் காலைத்தான் வைத்தேனே!'' என்று இன்ன பலஎண்ணங்கள் வளரவளர வழியும் குறுகிச் சாபாலன் இராசமாபுரம் வந்து சேர்ந்தான்.

---

* இச்செய்யுளின் பொருள்:—கோபாலன் என்று=கோபாலன் என்று அழைக்கப் பெற்ற, ஒரு கோமகன்=ஓர் அரசன் (கிருஷ்ணன்), ஆன்நிரை=பசுக் கூட்டத்தை, காத்தான்=காத்தான், பூபாலர்களும்=அரசர்களும், புவிதனை=உலகத்தை, புரந்திடுவார்கள்=காப்பார்கள்: மா=பெரிய, பாலம் ஒன்றினை=பாலம் ஒன்றை; மரத்தினில்=மரத்தினல், இட்டதே=போட்டதை, என்ன=போல, சாபாலனும்=சாபாலன் ஆகிய நானும், ஒரு கட்டுரை=இந்த உறுதிச்சொல்லை, சாற்றுவது=சொல்வது, எவனோ=என்ன காரணமோ.

வில்லி பாரத விளக்கம்

ஆதிபருவம்

வாரணாவதச் சருக்கம்

அருமறை முதல்வனை யாழி மாயனைக்
கருமுகில் வண்ணனைக் கமலக் கண்ணனைத்
திருமக டலைவனைத் தேவ தேவனை
யிருபத முளரிக ளிறைஞ்சி யேத்துவாம்.

171 பக்கத் தொடர்ச்சி

கருவிளக் கூவிளச் சீர்களையே பெரும்பாலும்பெற்று, நல்லதொரு சந்தம் வாய்ந்து, துள்ளலோசையுற்று விளங்கும் இக்காப்புச் செய்யுள், வில்லிபுத்தூராருக்குத் திருமாலிடத்துள்ள அன்பின் மிகுதியை வெளிப்படுத்துவதோடு, சந்தப்பாக்கள் செய்வதில் அவருக்கிருந்த திறத்தையும் காட்டிநிற்கிறது. இச்சருக்கம் பாண்டவர்கள் வாரணாவதமென்னும் காசிமா நகரத்தில் தனித்து வைகி அரக்குமாளிகையை எரித்துச் சென்ற விஷயத்தைப் பற்றிக் கூறுகிறது. தோற்றுவாயில் நாம் கூறியபடி நூற்று முப்பத்தாறு செய்யுட்களடங்கிய இச்சருக்கத்தில், கௌரவ பாண்டவர்களுடைய இளமைச் செய்கைகள் பல சுருக்கமாய்ச் சொல்லப்பட்டிருக்கின்றன. கௌரவர்கள் வீமனைக் கங்கையில் வீழ்த்தியதும், அவனைப் பாம்புகளால் கடிக்க வைத்ததும், அவனுக்கு நஞ்சையூட்டி அவனை நதியிற்றள்ளியதும், அவன்பாதலஞ்சென்று அமுதுண்டு மீண்டு வந்ததும் முதலிருபத்தெட்டுச் செய்யுட்களாற் கூறப்பட்டன.

கிருபன் இளஞ்சிறுவர்களுக்கு வில்வித்தை கற்பித்ததும், பிறகு துரோணன் வந்து தன் வரலாறு கூறி அவர்களுக்கு அக்கல்வியைப் பெருகச் செய்ததும், ஏகலைவன் செய்தியும், துரோணர் அவனிடஞ்சென்று வலக்கைப் பெருவிரலைக் குருதக்கிணையாய் வாங்கினதும், அருச்சுனன் வில் விளையாட்டில் தேறி இளமையிலேயே அவன் பற்பல செய்கைகளால் தன் திறத்தைக் காட்டியதும் பின்னல் சுருக்கமாய் விவரிக்கப்பட்டன. விற்பயிற்சியிற் றேர்ச்சி பெற்றதைக் காட்ட வேண்டித் துரோணர் அரசர்களை ஒருங்கே கூட்டின காலத்தில், வீமனுந் துரியோதனனுங் கதையை யெடுத்து விளையாடியதும், அருச்சுனனும் கன்னனும் தங்கள் வில்லில் நாணேற்றி வரிசைப்பட வாளி யெய்ததும், பின்னிருவரும் பொருளாய் ஒருவரை யொருவர் தாக்கத் தொடங்கியது மெல்லாம் நாற்பது செய்யுட்களில் சொல்லப்பட்டன. இதற்குள் இரு

முறை கவி செய்யுட்களின் யாப்பை மாற்றியிருக்கிறார். துரியோதனன் கன்னனுக்கு அங்க நாட்டையளித்ததும், துரோணருடைய வீரவார்த்தைகளைக் காத்து யாகசேனனை அருச்சுனன் போரில் வென்று தேர்ச்சக்கரத்தில் பிணித்துக் கொணர்ந்ததும், திரௌபதி பிறப்பும், துரியோதனனும் கன்னசௌபலரும் சதியாலோசனை செய்ததும், திருதராட்டிரன் புரோசனனென்னும் படிறன் ஒருவனை அமைச்சனுப் அமைத்துப் பாண்டவரை வாரணவத மனுப்பியதும் நூற்றப்பதினேழாம் செய்யுளோடு முடிவுபெற்றன. எஞ்சிய இருபது பாடல்களில் வாரணவதவாழ்க்கையைப் பற்றியும் வீமன் விதுரன் ஏற்படுத்தியிருந்த சிற்பியால் நிலவறையையறிந்ததும், அவன் அரக்கு மாளிகைக்கு எரியூட்டியதும், துரியோதனனேவலால் இவர்களுக்கு நஞ்சைக் கலந்து கொடுக்க வந்த வேடரைவரும் அவர்கள் தாயும் இறந்ததும், பாண்டு புத்திரர் மாண்டாரெனப் பெரியோர் மாழ்கியதும் விளக்கப்பட்டிருக்கின்றன. வசன நடையில் நிகழ்ச்சிகள் இன்னவை யென்று எடுத்துக் கூறுவதற்கே இவ்வளவு எழுதவேண்டியிருப்பதைக் கவி 136 செய்யுட்களிற்பாடி முடித்தது மிகவும் வியக்கத் தக்கதன்றோ?

வீமனைப் பாகீரதியிற் றள்ளிய துரியோதனன், 'தவனனை யுததியிற் சாய்த்தமாலைபோல்' விளங்கினான் என்று கவி கூறுகிறார். மாலையாகிய அந்திப்பொழுது, சூரியனைக் கடலிற்றள்ளி, அவன் அதில் மூழ்கியபின்னர், செக்கர் வானத்தாற் சிறிதுபோது சிறப்பெய்தியிருந்து பின் வெகு சீக்கிரத்தில் அவ்வொளி குறைந்து இருளாற் கௌவப்பட்டு மங்குவதுபோல், துரியோதனனும் வீமனை வீழ்த்திய பின்னர் ஒரு சிறை விளக்கமெய்தினவனாய்ப் பின் விரைவில் தான் செய்த தீவினையை நினைந்து முகம் கறுத்து ஒளி குறைந்து விட்டான்.

கிருபாசாரியர் அரசிளங்குமரருக்கு வில் வித்தை கற்பித்தும், குருகுலப்பதி வேறொரு குருவைத் தேடினான்.

> "இருளற மதிநில வெறித்த தாயினும்
> பரிதியை நயக்குமிப் பரவை ஞாலமே"

இருள் நீங்கும்படி நிலவானது தன்னொளி பரப்பி நின்றாலும், இந்நிலவுலகத்தி லுள்ளவர்கள் சூரியனையே நாடி நிற்பார்கள்; அதுபோல், கிருபர் இளஞ்சிறார்க்கு வேண்டிய விற்றொழிலைப் பகைவரும் வெருவும்படி கற்பித்தபோதிலும், அவரினும் மேம்பட்ட ஓர் ஆசிரியனை வீடுமன் தேடினான். இதில் ஆசிரியர் கருத்து இன்னதென எமக்கு விளங்கவில்லை. நிலவு குளிர்ந்தும், போதிய ஒளியைத்தந்துகொண்டுமிருந்த போதிலும், அதிகபிரகாசத்தையும், வெப்பத்தையும் தரும் அருக்கனை மன்பதைகள் நாடுவது எதற்கென்றால், அது புல் பூண்டுகளை வளரச் செய்யும் வல்லமை வாய்ந்ததான படியாற்றான். ஆகவே தண்ணளியும்,விற்றொழிலில் போதுமான வல்லமையும் வாய்ந்த கிருபரிருந்தும்,அவரைவிடக்கண்டித்துப் போதிக்கக்கூடியவரும்,வித்தைவளர ஏதுவாயிருப்பவருமான ஓர் ஆசிரியரை வீடுமர் தேடினார் என்று கொள்ளக்கிடக்கிறது. அங்ஙனமாயின், இவ்வேற்றுப்பொருள்வைப்பணியிற் குறிப்பாய்த் தோன்றிநிற்கும் கருத்து, இவ்வுலகத்தாரின் மதிஇருந்தவாறென்னே என்பதாகலின், அவ்வறியாமைப்பொருள் நாம் சொன்ன கருத்தில் அமையாது. இதைப்பற்றி இன்னும் விரித்தெழுதுதற்குப் பத்திரிகை இடந்தாராதானபடியால் இதை இவ்வளவோடு நிறுத்துவோம்.

இதற்கடுத்த செய்யுளின் முதலடியாகிய

'பரத நாத வேத பரத்து வாச னென்பான்'

(நாடகத்தலைவனான கடவுள் அருளிய வேதத்தையறிந்த பாரத்துவாசன்)

என்னும் வரியை, அதிலுள்ள வடசொற்பிரயோகத்திற்காக எடுத்துக் காட்டுவதுண்டு. இன்னும் இச் சருக்கத்தில் 'பானுராச சூனுவே,' என்று கன்னனைச் சொல்லுமிடத்துக்கூறியிருப்பதும், சனபதம் (நாடு), அனீகினி (சேனை),அனந்தரம் (பின்பு), பூதம் (இறந்தகாலம்), சரித் (நதி) என்னும் வடமொழிகளைப் பிரயோகித்திருப்பதும் நோக்கத் தக்கன.

ஐம்பத்து நான்காம் செய்யுளில் வீடுமனைப்பற்றிக் கூற வந்த விடத்து,

'அலைத்தலை நிலாவெழு சரிற்புதல்வ னுக்கு' என்று கங்காநதியின் பரப்பினாலும், ஆழத்தினாலும், அஃது ஒரு நதியாயிருந்தபோதிலும் அதில் அலைகளெழுமென்றும், அவ்வலைகள் பிறழும்போது திங்கள் அதில் பிரதிபிம்பிக்கும் என்றும், அதனால் அந்நீர் வெள்ளிபோலொளிரும் என்றும் கூறியிருப்பது, ஆங்கிலக்கவிகளின் சிற்சில கூற்றுகளை நமக்கு நினைப்பூட்டுகின்றது. திரௌபதியின் தமையன் தான்கொல்லப்போகும் துரோணரையே அடுத்து வில் வித்தை கற்பித்துக் கொடுக்கக் கேட்டதற்கு,

'அரணியிடத்திற் செறிந்தன்றோவதனைச் செகுப்ப தழலம்மா' - (தீக்கடைக் கோலிடைச் சேர்ந்தன்றோ தீ அதனை யழிப்பது) என்று உவமை கூறினர். அரக்கு மாளிகையில் ஐவரும் மாண்டாரென்று கேட்டபோது, துரியோதனனும் அவன் தம்பிமாரும் கொண்ட துயருக்குவமை,

'உட்ப னித்துமேல் வெயிலுற வெதும்புநீ ரொத்தார்' என்று வெகு நயம்படக் கூறி யிருக்கிறார்.

வாரணவதத்தரக்குமாளிகை எரிந்ததைக் கூறும் செய்யுளும் நோக்கத் தக்கதே.

> முடியு டைத்தடங் கிரியினை முளிகழை தொறுமூற்
> றடிநி லத்துறச் சூழ்வரு மாறுபோ லழலோன்
> கொடிநி ரைத்தபொற் கோபுரப் புரிசைசூழ் கோயி
> லிடியி டித்தென வெடிபடச் சிரித்தெழுந் தெரித்தான்

கோடுடைய பரந்த மலையில் உள்ள காய்ந்த மூங்கில்களிற் பிறக்கும் தீயானது வெகுவிரைவில் பரவி அம்மலைபடிவாரம் வரையில் சூழ்ந்துகொண் டெரிவதுபோல், கொடியுடைய பொற்கோபுரங்கள் நிறைந்த மதில் சூழ்ந்த அவ்வரண்மனையிற் றோன்றிய தீயானது, புடைசூழ்ந்து விரைவிற் பரவியது. அடிமுதல் முடிவரை யெரிதலே யியல்பானபோதிலும், மலையிற்றோன்றிய தீ, படிப்படியாய்க் கீழ்நோக்கியே வரக்கூடுமாதலால் இவ்வுவமையும் பொருத்தமுடையதாய்த்தா னிருக்கின்றது.

விளையாட்டு முற்றிக் கன்னனும் கிரீடியும் தம்முள் மறங்கொண்டு போருக் கெழுந்தபோது, கிருபாசாரியர், இழிகுலத்தவனாகிய கன்னன், அரச குலத்தவனை தனஞ்சயனோடு போர் புரியத் தகுந்தவனல்லன் என்றுகூறத்துரியோதனன் அவரைமறுத்துச்சொன்ன இரண்டு செய்யுட்களும், பொருட் பெருக்குடையனவாய்ச் சந்தமும் அழகுபட நிறைந்திருப்பதால் அவைகளை இங்கெடுத்துக் கூறுவோம்:

> "கற்றவர்க்கு நலநிறைந்த கன்னியர்க்கும் வண்மைகை
> யுற்றவர்க்கும் வீரரென்று யர்ந்தவர்க்கும் வாழ்வுடைக்
> கொற்றவர்க்கு முண்மையான கோதில் ஞான சரிதரா
> நற்றவர்க்கு மொன்று சாதி நன்மை தீமை யில்லையால்.

> அரிபி றந்த தன்று தூணி லரனும் வேயி லாயினன்
> பரவை யுண்ட முனியு மிப் பரத்து வாசன் மைந்தனு
> மொருவ யின்கண் முன்பிறந்த தொண்சரத்தினல்லவோ
> வரிய வென்றி முருக வேளு மடிகளும் பிறந்ததே!"

"கல்விகேள்வி நிரம்பப்பெற்ற நூலறிவாளருக்கும், கணவன் சொற்றிறம்பாத அறக்கற்புடைய கன்னியருக்கும், வள்ளன்மைபாற் சிறந்து விளங்கும் கொடையாளருக்கும், போர்முனையில் உயிருக்கஞ்சாது தறுகணாண்மையுடன் பொரவல்ல மேம்பாடுடைய வீரர்களுக்கும்,சிறந்தநல்வாழ்வையுடையவேந்தருக்கும்,தலையைமுண்டிதஞ் செய்துகொண்டு, காவியுடுத்து உயர்திணைப்பொருளை அஃறிணையாய்ப்பேசும் போலித்துறவிகள் போலல்லாமல், உண்மையான குற்றமற்றஅறிவொழுக்கத்தையுடைய நல்ல துறவிகளுக்கும் ஜாதி யொன்றே. அவர்களுள் ஏற்றத்தாழ்வு இல்லை.

"திருமால் பிறந்தது தூணிலன்றோ? சிவனும் மூங்கிலில் தோன்றினன். கடல் குடித்த குறுமுனியும், பரத்துவாசன் குமாரனான துரோணனும் ஓர் இடத்தில், அதாவது கும்பத்திலன்றோ பிறந்தார்கள்? அரிய வெற்றியையுடைய முருகவேளும் தாங்களும் பிறந்தது (சரத்தினல்லவோ) நீரிலும், புல்லிலு மல்லவோ? அவ்வாறிருக்கக் கன்னன் பிறப்பைப் பற்றிப் பழித்துக் கூறுவானேன்? என்று துரியோதனன் துணிந்துரைத்தான். ஜாதியின் வேற்றுமை அவரவர்கள் செய்கையாலும் குணத்தாலுமே யெய்துமென்பது பகவத்கீதையிலும், 'சாதுர் வர்ண்யம் மயா ஸிருஷ்டம் குணகர்ம விபாகஸ:' என்று கூறப்பட்டிருப்பதால், தன் செய்கையால், வின்வன்மையால் அரசகுலத்திற் குரியவன் கன்னன் என்பதைத் துரியோதனன் நிலைநிறுத்தினான். அதற்கடுத்த செய்யுளால், பிறர் குற்றங்களையும், மற்றவர் தாழ் பிறப்பையும் அவ்வாறே எடுத்துக்காட்டி, எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும், அக்குடியிற் கற்றவரே மேலோர் என்று துரியோதனன் வாதித்தான். இவ்வாறு துரியோதனன், சிற்சில வேளைகளில் நியாயமெடுத்துரைத்துப் பெரியோர்களை எதிர்த்துப் பேசித் தன்னறிவை வெளிப்படுத்தியு மிருக்கின்றான். பொதுவில் அவன் நல்ல குணங்களை யுடையவனாயிருந்த போதிலும், நல்லாரோ டிணங்கி வாழாததாலும், சிற்றினஞ் சேர்ந்தமையாலும் தன் சிறப்புக் குன்றிக் கேடடைந்தான். அவன் தயாரித்து அனுப்பிய புரோசனனென்னும் அமைச்சன் ஒழுகின ஒழுக்கமும் வஞ்சனையானதென்று தெரிந்துகொண்டு, பாண்டவர் அவனுடைய, 'தொழுதகையுளும் படையுள'' தென்றஞ்சி எச்சரிக்கையாயிருந்தார்கள். இது திருக்குறளிலிருந்து எடுக்கப்பட்டது.

> "தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
> ரழுதகண் ணீரு மனைத்து"

பகைவர் குறிப்பை யுணர வல்லவருக்கு, அவர் கும்பிட்ட கையுள்ளும் படைக்கலம் மறைந்திருக்கும்; அவரழுத கண்ணீரும் அவ்வாறே அதுமறைந்திருக்க இடனாகும் என்பது வள்ளுவர் திருவாக்கு. பகைவனை அவன் செயல் கண்டு அவன் குணத்தைத் தெளியக்கூடாதவனாய்ப் புரோசனனும் இருந்தான். அதனாற்றான் அவனுக்கு அகால மரணமும் நேரிட்டது.

இச்சருக்கத்தினால் நன்னெறியைக் கடைப்பிடித்து நீதி தவறாது நடப்பவர்களுக்குத் தெய்வமும் துணை செய்யும் என்பதும், அவர்களுக்கு வரும் இடுக்கண்களெல்லாம் இமைப்பொழுதில் நீங்கும் என்பதும் பெறப்படுகின்றன.

அப்பர்

3. அப்பர் சிவஸ்தல யாத்திரைகளைப்பற்றிய புராண வரலாறு

3 தஞ்சாவூர் ஜில்லாத் தலயாத்திரை

164 பக்கத் தொடர்ச்சி

திருநாரையூரை வாகீசர் விட்டபின்னர்த் தொண்டர் குழாம் புடை சூழத் தொழுத கரங்களுடனும் திருநீறு விளங்கும்கோலம் கண்டவர் மனங்கரைந்துருக ஆளுடைய பிள்ளையார் வதியும் சீர்காழியை நோக்கிச் செல்வாராயினர். இவர் வருகையைக் கேட்ட சம்பந்தரும் அளவற்ற விருப்பினராய் எதிர்கொண்டழைக்கத் தொண்டர்களுடன் எதிராய் வந்தார். திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தரை *அடி பணிந்து வணங்கினர். சம்பந்தரும் வந்தனம் செய்து கும்பிட்டு, 'அப்பரே,' என்ன, வாகீசரும், 'அடியேன்' என்றார். "அப்பர்" என்னும் இச்செல்வப்பெயர் திருநாவுக்கரசுக்கு வழங்கலாயிற்று. இந்நாள்வரையில் புகலி மன்னர் இட்ட இச்செல்வப்பெயராலே வாகீசரை நாம் பெரும்பாலும் அழைக்கின்றோம்.

அப்பரும் திருஞான சம்பந்தரும் ஒருவரில் ஒருவர் கலந்த உண்மையோடு தோணியப்பர் திருக்கோ

* சிவனடியார் ஒருவரை யொருவர் பணிதல்மரபு:—

(i) எவரேனும் தாமாக விலாடத் திட்ட
திருநீறு சாதனமும் கண்டா லுள்கி
யுவராதே யவரவரைக் கண்ட போது
உகந்தடிமைத் திறநினைந்தங் குவந்து நோக்கி
இவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி
யிரண்டாட்டா தொழிந்தீசன் றிறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே
கன்றாப்பூர் நடுதறியைக் காணலாமே
—திருக்கன்றாப்பூர்-திருத்தாண்டகம், 3—

(ii) 'வெற்றவேயடி பாரடிமிசைவீழும் விருப்பினன்வெள்ளை [நீறணியும்
கொற்றவன் றனக்கு மந்திரியாய குலச்சிறை........." (2)
கணங்களாய் வரினும் தமியராய் வரினு மடியவர் தங்களைக் [கண்டால்
குணங்கொடு பணியும் குலச்சிறை குலாவும் கோபுரம் சூழ் [மணிக்கோயில் (4)
—சம்பந்தர் திருவாலவாய்—பண். புறநீர்மை.

யிலை யடைந்தனர். கோபுரத்தைப் பணிந்து உள்ளே சென்றவுடன் அப்பரைப்பார்த்து ஆளுடைய பிள்ளையார், ‘நம்பிரான்மேல் நீர்பதிகம் பாடவேண்டும்’என்று விளம்ப, அப்பர் “ பார்கொண்டு மூடி ” என்றாரம்பிக்கும் திருவிருத்தப்பாமாலையைப்பாடினார். இப்பதிகத்திலுள்ளபத்துப்பாசுரங்களும், மற்றொருபதிகத்திலோரே * பாசுரமும் நமக்குக்கிடைத்தன. இப்பதிகொரு பாக்களும் சீர்காழியின் நிலை † அப்பர் காலத்தில் எத்தன்மையதென விளக்குகின்றன. அக்காலத்தில் சீர்காழி. சமுத்திரதீரத்தில் இருந்ததாகவும் விளங்குகின்றது. இப்பதிகங்கள் அக்காலத்துச் சரித்திர ஆராய்ச்சிக்குக் கருவிகளாய்ப் பயன்படும்.

பல நாள் அப்பர் திருஞான சம்பந்தர் மடத்தில் நாளுக்கு நாள் விருத்தியடையும் நட்புடன் வசித்திருந்தார்; பின்னர், தாம் சோழ நாட்டுத் திருப்பதிகளுக்குச் செல்லவேண்டுமென்கின்ற அவாவைச் சம்பந்தருக்குத் தெரிவித்தார். அவரும் அதற்கு உடன்பட இருவரும் ‡ திருக்கோலக்காவென்னும் திருப்பதிக்கு வந்து அவ்விடத்து ஈசனை வழிபாடு செய்த பின்னர்த்திருஞானசம்பந்தர் சீர்காழிக்குத்திரும்பியருளினார். அவரிடம் விடைபெற்ற அப்பர் ¶ திருக்கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை, திருநின்றியூர், திருநனிபள்ளி முதலிய ஸ்தலங்களில் கண்ணுதலார் கழல் தொழுது செல்வாராயினர் என்று பெரிய புராணம் கூறும்.

இத்தலங்களுள் திருக்கருப்பறியலூர்மேல் பாடிய அப்பர் பதிகம் நமக்குக் கைப்பற்றுகவில்லை. திருப்புன்கூர் திருநீடூர் இவ்விரண்டு தலங்களையும் சேர்த்துப் பாடிய திருத்தாண்டகப்பதிகம் ஒன்றுண்டு. இப்பதிகத்தின் பத்துப் பாசுரங்களையும் நோக்குமிடத்து, இப்பதிகம் பாடியநாளில் அப்பர் இத்திருப்பதிகள் செல்லவில்லை $ யென்றெண்ண வேண்டியதா யிருக்கின்றது. திருநின்றியூரில் இவர் பாடிய திருக்குறுந்தொகை சன்மார்க்க நெறியிற்றங்கிய அவ்வூரின் ஏற்றமும் † நிலைமையும் விளக்கும் திருநனிபள்ளியிற் பாடிய திருநேரிசைப் பதிகத்தில் ஒன்பதாம் பாசுரம் ‡ எட்டாம் பாசுரத்தின் 3-வது, 4-வது அடிகளும் மறைந்து போயின. இப்பதிகம் மனிதன்தன் தொண்ணூற்றாறு$ தத்துவங்களாற்படும் துன்பம் நீங்கும் துறைகளைக் காட்டுகின்றது. திருக்குறுந்தொகை வீரட்டத்தில் இவர் திருவாய் மலர்ந்தருளிய இரண்டு திருநேரிசைப் பதிகங்களில் ஒன்றுபத்துப் பாசுரங்களுள்ளது. எவ்வெவர் சிவபூசையால் மேன்மை யடைந்தனரென விரித்துக்காட்டும்; பிரமன், மார்கண்டன், தண்டி, சிலந்தி, விஷ்ணு, சாக்கியன், கண்ணப்பர், எலி, கணம்புல்லர், இராவணன் இவர்கள் செய்த வெவ்வேறு விதத் தொண்டுகளும் ஏற்ற சிவபெருமான் தன்மையையும் அவ்வவர் அடைந்த பயன்களையும்விளக்கும். மற்றொரு பதிகத்தில் இரண்டு பாசுரங்களே செல்லுக்குத் தப்பியவை.

மேற்சொன்ன பதிகங்கள்பாடியபின்னர்த் தெற்கே மயூரம் (மாயவரம்) என்னும் திருமயிலாடு துறைக்குச் செல்வா ராயினர். திருச்செம்பொன் பள்ளியென்னும் செம்பனார் கோயிலுக்குச்சென்று * ஊனினுள்ளுயிரைவாட்டி, உணர்வினார்க்கெளியராகி வானினுள் வானவர்க்கும் அறியலா காத வஞ்சர்”மேல் ஒரு திருநேரிசைப்பதிகமும் ஒரு திருக்குறுந்தொகையும் பாடினார். இவ்விடத்திய *மூவராய் முதலாய்நின்ற மூர்த்தியைக்கைதொழுது, இதற்குமேற்கில் 6 மைலில் உள்ள மாயவரம் சேர்க்கைக்கு இரண்டு மைலில் கிழக்கேயுள்ள திருமயிலாடு துறைக்குச் சென்றார். இத்தலத்தில் பாடிய திருக்குறுந்தொகைப் பதிகம் ஒன்றே கிடைத்தது. அதன் அகப்பொருளிலக்கணத்தில் “வெள்ளந் தாங்கும் சடையனை வேண்டிய” காதன்மை, சித்தம் தேறுவதற்கும், இகமுத்திரார்த்த பலபோக விராகத்திற்கும், இறப்புப் பிறப்பொழிப்பதற்கும் குறைவொன்றின்றி மானிட வாழ்க்கை யனுபவிப்பதற்கும், பயன்படுமென்பதைக்காட்டி, பின்னர் நெஞ்சை நோக்கி, “உன் நிலைமையைச் சொல்! மயிலாடு துறையன், நம் மனத்துள்ளும், தலைமீதும் தங்குவதற்கு என்ன செய்தாய்?” என்றும், அரனைப் போற்றாவார் புலன் மாறுதலடைவதால், “அத்தகையோருக்குப் புவிவாழ்க்கை எது?” என்றும், யோகதண்டம்,

---

* படையார் மழுவொன்று பற்றிய கையன் பதிவினவில்
கடையார் கொடிநெடு மாடங்க ளோங்கும் கழுமலமாம்
மடைவாய்க் குருகினம் பாளை விரிதொறும் வண்டினங்கள்
பெடைவாய் மதுவுண்டு போரா திருக்கும் பெரும்பதியே.

† (i) நிலையும் பெருமையும் நீதியும் சால வழகுடைத்தாய்
அலையும் பெருவெள்ளத் தன்றுமி தந்தவித் தோணிபுரம் .6

(ii) கடையார் கொடிநெடு மாடங்க ளெங்குங் கலந்திலங்க
உடையா னுடைதலை மாலையும் சூடி யுகந்தருளி
விடைதா னுடையவவ் வேதியன் வாழும் கழுமலத்துள்
அடைவார் வினைக ளவையெள்க நாடொறு மாடுவரே 2

—திருக்கழுமலம்-திருவிருத்தம்

‡ இது சீர்காழியிலிருந்து முக்கால் மைலில் மேற்கிலுள்ளது. இதனைத் திருத்தாள முடையார் கோயில் என்பர். “ நாளுமின்னிசையாற் றமிழ்பரப்பு ஞானசம்பந்தனுக்குலகவர்முன், தாளமீந்தவன் பாடலுக்கிரங்கும் தன்மையாளனை ...போலக்காவினிற் கண்டு கொண்டேனே” என்னும் சுந்தரமூர்த்தி நாயனார் பாடலில் இத்தலத்தில் சம்பந்தர் பொற்றாளம் பெற்ற சரித்திரம் கண்டிருக்கிறது.

¶ இத்தலங்கள் வைதீஸ்வரன்கோயில், ஆனைத்தண்டாபுரம் என்னும் ஸ்டேஷன்களுக்குச் சமீபத்திலுள்ளஸ்தலங்கள்.

$ திருப்புன்கூர், திருநீடூர் என்னும் திருப்பதிகளில் மேவிய சிவலோகனை, “நீதனேனென்னே நானிளையாவாறே” என்கிற பாசுர முடிவுகளை நோக்குக. திருப்புன்கூர் என்பது வைதீஸ்வரன்கோயில் ஸ்டேஷனிலிருந்து ஒன்றே முக்கால்மைலில் மேற்கேயுளது. திருநீடூர் என்பது ஆனைத்தண்டாபுரம் ஸ்டேஷனுக்குத் தென்மேற்கே ஒரு மைலில் உள்ள ஸ்தலம்

† வீதி வேனெடுங் கண்ணியர் வெள்வளை
நீதி யேகொளப் பாலது நின்றியூர்
வேத மோதிவி ளங்குவெண் டோட்டராய்க்
காதில் வெண்குழை வைத்தவெங் கள்வரே—(2)
பறையி னோசையும் பாடலி னோசையும்
மறையி னோசையும் மல்கி யயலெலாம்
நிறையும் பூம்பொழில் சூழ்திரு நின்றியூர்
உறையு மீசனை யுள்குமென் னுள்ளமே—(4)

—திருநின்றியூர்-திருக்குறுந்தொகை—

‡ “மண்ணுளே திரியும்போது வருவன பலவுங் குற்றம்
புண்ணுளே புரைபு ரையன் புழுப்பொதிப் பொள்ள [யாக்கை”

$ 3-ம் பாசுரம்முதல் 7-ம் பாசுரம் வரையிலுள்ளவை. திருநீடூரிலிருந்து வடமேற்கே 6 மைலில் உள்ளது [இத்திருப்பதி.

¶ திருச்செம்பொன்பள்ளி, திருநேரிசை—1

* திருச்செம்பொன்பள்ளி—திருக்குறுந்தொகை—5.

தர்ப்பாசனம், மான்தோல் முதலியனவா, முத்திக்கு இன்றியமையாதன? “நுண்ணுணர்ந்தோர்கட்கு” கல்வியும் நூலும் அநாவசியமே என்றும் அர்த்தநாரீஸ்வரர் கோலத்தின் அழகைக்கண்டு போற்றுவோமானால் கயிலையை யெடுத்த ராவணனின்னிசைக்கு அருள் செய்த பெருமான், நம் வினையைக் கட்டறுப்பானன்றோ என்றும், இத்தகைய அரிய விஷயங்களை மாந்தர் எளிதில் கண்டறியும்வண்ணம் பாடலாயினார்.

† திருமயிலாடுதுறைக்குப் பின்னர் அப்பர் ‡திருத்துருத்தி, $ திருவேள்விக்குடி, ¶ எதிர்கொள்பாடி, திருக்கோடிகா முதலிய தலங்களைத் தரிசித்துத் திருஆவடுதண்டுறையடைந்தார் என்று சேக்கிழார் கூறுகின்றனர். திருத்துருத்தியில் அப்பர் பாடிய திருநேரிசை “பொருந்திய குரம்பைதன்னைப் பொருளெனக் கருதவேண்டா” என்றும், “குண்டரே சமணர் புத்தர் குறியறி யாதுநின்று, கண்டதே கருதுவார்கள்.” இறைவனுக்குத் தூம நல்லகிலும் காட்டித் தொழுதடி வணங்குமினென்றும் பல நற்புத்தி புகட்டும் “இருவினையொப்பு” பொருந்துமிப் பாசுரங்கள் உபநிடதங்களின் உண்மைகளை உள்ளங்கை நெல்லிக்கனியாய் விளக்கும். திருவேள்விக்குடி, எதிர்கொள்பாடி யென்னும் திருப்பதிகளில் பாடிய பதிகங்கள் நமக்குக் கிடைக்கவில்லை. * திருக்கோடிகாவில் பாடியதிருநேரிசை ஒன்று, திருக்குறுந்தொகையொன்று, திருத்தாண்டகம் ஒன்று நமக்குக் கிடைத்தன. அவற்றுள் திருக்குறுந்தொகையின் 7, 8, 9-வது பாசுரங்களும் திருத்தாண்டகத்தில் 9, 10-வது பாசுரங்களும் வன்மீகத்தில் மறைந்தனவற்றைச் சேர்ந்தவை. திருக்கோடிகாப் பதிகத்தில்திருத்துருத்தியைப் பற்றியும், திருத்துருத்திப் பதிகத்தில் கோடிகாவைப் பற்றியும் பாடியிருப்பதும் காண்க

† திரு ஆவடுதுறையில் அப்பர் பாடிய திருநேரிசைப்பதிகங்கள்இரண்டும், திருக்குறுந்தொகை ஒன்றும், திருத்தாண்டக விருத்தங்கள் இரண்டும் நாம் இவர் திருமுறைகளிற் காண்கின்றோம். இத்தலத்தில் சந்த விருத்தங்கள் பாடியதாகச் சேக்கிழார் கூறுகின்றார். அவற்றில் நமக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. இப்பதிகங்கள் தென்னிந்திய சரித்திர ஆராய்ச்சிக்குப் பயன்படத்தக்கவைகளாம். இத்திருப்பதியில் திருஞான சம்பந்தருக்கு ஆயிரம் பொன் கொடுத்த அற்புதத்தை அப்பர் ‡ “மாயிரு ஞால” மென்னும் திருநேரிசைப் பாசுரத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

திருஆவடுதுறை அப்பர் மனத்தில் குடி கொண்டு நின்ற திருப்பதிகளில் ஒன்றும். வேறு ஸ்தலங்களின் பதிகங்களில் ஆவடு தண்டுறையானை நினைப்பதைச் சில இடங்களிற் காணலாகும். * தமிழ்மணக்கும் இத்தலம் மூவராலும் பாடப் பெற்றது.

திருவாவடுதுறையினின்று அப்பர் திருவிடைமருதூருக்குச் சென்று, பலபதிகங்கள்பாடித் திருநாகேச்சரம் சென்றதாய்ப் பெரியபுராணம் கூறுகின்றது. ஆயினும், இப்பதியில் இரண்டு திருத்தாண்டகப் பதிகங்கள், (இரண்டும் பத்துப்பாசுரங்களுடனிருக்கின்றன) இரண்டு திருக்குறுந்தொகை, (ஒன்றில் 11, மற்றொன்றில் 6-பாக்களேயுள), ஒரு திரு நேரிசை (10 பாடல்கள் பெற்றது), இவ்வைந்து பதிகங்களே தற்காலத்தில் உள்ளவை. இவ்வூர் ‡ தாமரை வேலிகளைப் பெற்ற தென்றும் நீர்வளம் நிலவளம் பூமிவளம் சிறந்ததாய் அழகிய சோலைகள் சூழ்ந்தவூரென்றும் அப்பர் தேவாரத்தால் அறிகின்றோம். இத்தலத்தில்கமலங்கள் அதிக மாதலால் ‡ அடியார்கள் அன்று மலர்ந்த தாமரை மலர்களாலே பூசையில்சிவபெருமானை அர்ச்சனை செய்தார்களென்றும் நாம் அறிகின்றோம். இத்தலத்தில் பாடிய சில பாசுரங்களின் பொருள் நன்கு விளங்கவில்லை. இனி ஆராய்ச்சி புரியும் அன்பருக்கு நாம் அவற்றை விடவேண்டுமன்றி யாதும் தற்காலத்தில் செய்ய ஏலாமையா யிருக்கின்றது. *

---

* திருமயிலாடுதுறை மாயூரம் என்னும் வடமொழிப் பெயர் பெற்று, மாயவரம் எனச் சிதைந்து மருவியது. தமிழ் மொழியால் பேர்பெற்ற ஒவ்வொரு ஸ்தலமும், பிற்காலத்தில் வடமொழி நாமங்கள் வழங்கப்பெற்றனவாய்த் தமிழ் நாமங்களை இழந்தமை காண்க!

‡ குற்றாலம் (ஸ்டேஷன்) $ குற்றாலத்தினின்று வடக்கே மட்சாலை மார்க்கமாய் ஒருமைலிலுள்ள (காவிரிக்கு வடக்கே) மஞ்சிவாய்க்கால் வடகரை வழியாய்க் கிழக்கே மயூரத்திற்குச் செல்லும் சாலையில் ஒரு மைலில் உள்ளது.

திருவேள்விக்குடியினின்று வடக்கே கரை மார்க்கமாய் 1½ மைலில் உள்ளது. இதற்கு மேலைத் திருமணஞ்சேரி யென்று பெயர்.

† இது நாசிங்கம்பேட்டை ஸ்டேஷனுக்கு வடகிழக்கில் மூன்று மைலிலிருக்கிறது. இந்த ஸ்டேஷனுக்குத் தென் கிழக்கே ஒரு மைலில் திருவாவடுதுறை இருக்கின்றது.

‡ மாயிரு ஞாலமெல்லா மலரடி வணங்கும் போலும்
பாயிருங் கங்கையாளைப் படர்சடை வைப்பர் போலும்
காயிரும் பொழில்கள் சூழ்ந்த கழுமல வூரர்க்கம்பொன்
ஆயிரம் கொடுப்பர் போலு மாவடு துறையனாரே.

—திருவாவடுதுறை-திருநேரிசை —1.

[குறிப்பு:—இப்பதிகம் அப்பர் சிலகாலத்திற்குப் பின்பு திரும்பிவந்தபோது பாடியது. 84-ம் பக்கத்தை நோக்குக]

* ஒருநாள் திருஞானசம்பந்தர் சுவாமி தரிசனம் செய்து பத்திரலிங்கமாகிய பலிபீடத்துக்குச் சமீபித்தபோது இங்கே தமிழ்மணம் வீசுகிறதென்று திருவாய் மலர்ந்தருளினார். அங்குள்ளோர் உடனே அப்பலிபீடத்தை வேறாக எழுந்தருளச் செய்தனர். சம்பந்தர் அதனடியிற் சேமித்திருந்த திருமந்திரத் திருமுறையை வெளியே எடுத்துத் தமிழ் நாடெங்கும் பரவச் செய்தார்.

† (i)காடுடைச் சுடலை நீற்றர் கையில்வெண்டலையர் தையல்
பாடுடைப் பூதம் சூழப் பரமனார் மருத வைப்பில்
தோடுடைக் கைதை யோடு சூழ்கிடங் கதனைச் சூழ்ந்த
எடுடைக் கமல வேலி யிடைமரு திடங்கொண் டாரே (1)

(ii) மலையுடன் விரவி நின்று மதியிலா வரக்க னாக்கத்
தலையுட னடர்த்து மீண்டே தலைவனு வருள்க ணல்கிச்
சிலையுடை மலையை வாங்கித் திரிபுர மூன்று மெய்தார்
இலையுடைக் கமலவேலி யிடைமரு திடங்கொண்டாரே

—திருவிடை மருதூர்—திருநேரிசை —(10)

$ (i) பாச மொன்றில ராய்ப்பல பத்தர்கள்
வாச நாண்மலர் கொண்டடி வைகலும்
ஈச னெம்பெரு மானிடை மருதினில்
பூச நாம்புகு தூம்புன லாடவே.”

—திருவிடைமருதூர்—திருக்குறுந்தொகை—1

(ii) காருடைக் கொன்றை மாலை கதிர்மதி யாவி னோடு
நீருடைச் சடையுள் வைத்த நீதியார் நீதி யாய [பால்
போருடை விடையொன் றேறவல்லவர் பொன்னித் தென்
ஏருடைக் கமல மோங்கும் இடைமரு திடங்கொண்டாரே

—திருவிடைமருதூர்—திருநேரிசை—3.

* பொன்றிகழ் கொன்றைமாலை புதுப் புனல் வன்னிமத்தம்
மின்றிகழ் சடையில் வைத்து மேதகத் தோன்று கின்ற
அன்றவ ரனக்க லாகா வனலெரி யாகி நீண்டார்
இன்றுடன் உலக மேத்த இடைமரு திடம்கொண்டாரே

—திருவிடை மருதூர் - திருநேரிசை—9.

திருவிடை மருதூரில் அப்பர் "வண்டமிழ்மாலைகள் பல பாடிச் சாத்திய பின்னர், திரு நாகேச்சரத்திற் குச் சென்றிட்டார். அவ்விடத்தில் பாடிய திருநேரிசைப் பதிகம் திருவிடைமருதூர்த் திருத்தாண்டக விருத்தம்போல் நடையிலும், விடயங்களிலும் ஒத்து நிற்பதால், சேக்கிழார் எழுதிய பெரிய புராண வரலாறு தேவாரத்து உட்சாட்சியங்களுக்குப் பேதமின்றிப் பொருந்துகின்றது. இத்திருப்பதியில் ஒரு திருநேரிசைப்பதிகம், ஒரு திருக்குறுந்தொகை, ஒரு திருத்தாண்டகம் பூர்த்தியாய்த் திருமுறைகளில் முப்பது பாசுரங்கள் காண்கின்றோம். இப்பதியின் திருநேரிசைப் பதிகம் சிவபெருமான் திருவிளையாடல்களை விரித்துக்கூறும். இதில் * "பருப்பதவில்லர், நாகநாணுடையார்" என்று நாகவீச்சரவனைப்பாடியதால், அப்பர் காலத்தில் † திருப்பருப்பதமென்னும் மலை பரமன் வில்லாய் வளைத்த மேருமலையென்று எண்ணப் பட்டதென்று நாம் அநுமானிக்கலாகும். இத்தலம் இந்தியாவில் ‡ பல திசைகளிலும் உள்ள மனிதர்கள் யாத்திரை செய்து தரிசிக்கும் க்ஷேத்திரம் என்று அப்பர் திருக்குறுந்தொகையிற் காணலாம். 3 முதல் 10-ம்பாசுரம் வரையிலும் சிவபராக்கிரமங்களைச்செப்பியதும், இரண்டாம் பாசுரத்தில் பலர் "மேவி வந்து வணங்கி வினையொடு பாவ மாயின பற்றறு"த்தல்செப்பியதும் தர்க்கவொழுங்குப் பொருந்திநிற்கும். உடன்பாட்டில் காட்டிய விஷயங்கள் எதிர்மறையில் $ "திருநாகேச்சரத்துளானைச் சேராதார் நன்னெறிகட் சேராதாரே" என்று திருத்தாண்டகத்திற் காட்டப்பட்டன. ¶

[குறிப்பு:— திருநாவுக்கரசு நாயனர் மொழிந்த பாசுரங்களிலும் ஒவ்வொரு பதமும் அளக்கலாகா ஆழமும் அளவும் பெற்றிருப்பதால் "இன்றுடன்" என்னும் மொழியில் எக்கருத்து அமைந்ததோ, தெரியவில்லை. அறிஞர் ஆராய்க.

கீழ்க்கண்ட இரண்டு பாசுரங்களின் பொருள் அடியேனுக்கு விளங்கவில்லை:—

1. ஐயிரண்டு மர்றேன்று மானுர் போலும்
அறுமூன்று நான்மூன்று மானுர் போலும்
செய்வினைக ணல்வினைக ளானுர் போலும்
திசையனைத்து மாய்நிறைந்த செல்வர் போலும்
கொய்மலராங் கொன்றைச் சடையர் போலும்
கூத்தாட வல்ல குழகர் போலும்
எய்யவந்த காமனையும் காய்ந்தார் போலும்
இடைமருது மேவிய வீசனுரே.

2. பிரியாத குணமுயிர்கட் கஞ்சோ டஞ்சாய்
பிரிவுடைய குணம்பேசிற் பத்தோடொன்றய்
விரியாத குணமொருகா லுங்கே யென்பார்
விரிவிலாக் குணநாட்டத் தாறே யென்பார்
தெரிவாய குணமஞ்சும் சமிதை யஞ்சும்
பதமஞ்சும் கதியஞ்சும் செப்பினுரும்
எரியாய தாமரைமே லியங்கி னுரு
மிடைமருது மேவிய வீசனுரே"
—திருவிடைமருதூர் - திருத்தாண்டகம்—6, 7.

* போகமார் மோடி கொங்கை புணர்தரு புனிதர் போலும்
வேகமார் விடையர் போலும் வெண்பொடி யாடு மேனிப்
பாகமா லுடையர் போலும் பருப்பத வில்லர் போலும்
நாகநா ணுடையர் போலும் நாகவீச் சரவ னுரே.
—திருநாகேச்சரம்—திருநேரிசை—8.

திருப்பருப்பதம்—ஸ்ரீசைலம், ஸ்ரீபர்வதம் என்னும் நாமங்களுடையது. இது கர்னூல் ஜில்லாவிலுள்ள ஸ்தலம்.

† வரியரா நாண தாக மாமேரு வில்ல தாக
அரியன முப்பு ரங்கள் ளவையா ரழலூட்ட லென்னே?
விரிதரு மல்லி கையும் மலர்ச்சண் பகமும்ம ளேந்து
திரிதரு வண்டு பண்செய் திருநாகேச் சரத்தானே!
—சுந்தரர்—8

‡ "நாவ லம்பெரு தீவினில் வாழ்பவர்
மேவி வந்து வணங்கி வினையொடு
பாவ மாயின பற்றறு வித்திடும்
தேவர் போற்றிரு நாகேச் சரவரே"
—திருநாகேச்சரம்—திருக்குறுந்தொகை—2.

$ "மெய்யானைத் தன்பக்கல் விரும்பு வார்க்கு
விரும்பாத வரும்பாவி யவர்கட் கென்றும்
பொய்யானைப் புறங்காட்டி லாட லானைப்
பொன்பொதிந்த சடையானைப் பொடிகொள்
பையானைப் பையரவ மசைத்தான் றன்னைப் [பூதிப்
பரந்தானைப் பவளமால் வரைபோல் மேனி
செய்யானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிகட் சேரா தாரே."
—திருநாகேச்சரம்—திருத்தாண்டகம்—5.

¶ கும்பகோணம் ஸ்டேஷனிலிருந்து 3 மைலில் திருநாகேச்சரம் இருக்கிறது.

தமிழ்ப் பாடம் 62.

[நளவெண்பா.]

கலி நீங்கு காண்டம்

எங்கோன் மகளுக் கிரண்டாஞ் சுயம்வரமென்
றங்கோர் முரச மறைவித்தான்—செங்கோலாய்
அந்நாளு நாளை யளவென்று னந்தணன்போய்த்
தென்னுளுந் தாரானைச் சார்ந்து. 38

பதப்பிரிவு:—எம் கோன் மகளுக்கு இரண்டுஆம் சுயம் வரம் என்று அங்கு ஓர் முரசம் அறைவித்தான் செங்கோலாய் அ நாளும் நாளை அளவு என்றான் அந்தணன் போய் தென் ஆளும் தாரானை சேர்ந்து.

பதவுரை

அந்தணன் போய் - புரோகிதன் (அயோத்தி நகரத்திற்குச்) சென்று,
தென் - அழகானது,
ஆளும் - தங்கி இருக்கின்ற,
தாரானை - மாலையை அணிந்த இருதுபன்னனை,
சேர்ந்து - அடைந்து,
"செங்கோலாய் - அரசனே,
எம் கோன் - எமக்கு அரசனுகிய வீமராசன்,
மகளுக்கு - (தன்) புத்திரிக்கு,
இரண்டுஆம் - இரண்டாவதாகிய,
சுயம்வரம் என்று - சுயம்வரம் (நடைபெறும்) என்று சொல்லி,
அங்கு - அவ்விதர்ப்ப நாட்டில்,
ஓர் - ஒப்பற்ற,
முரசம் - பேரிகையை,

அறைவித்தான் - அடிப்பித்தான்,
அ - அந்த,
நாளும் - (சுயம்வரத்திற்குக் குறிப்பிட்ட) தினமும்,
நாளை அளவு - நாளைத்தினத்தின் அளவினையுடையது,"
என்றான் - என்று கூறினன்.

விரிவுரை:—அந்தணன் குறிப்பறிந் தொழுகும் ஆற்றல் மிக்கவன் ஆதலால், தமயந்தியின் கூற்றின் குறிப்புணர்ந்து, தான் எவ்வாறு கூறினால் இருதுபன்னன் உடனே புறப்பட முயல்வான் என்பதையுணர்ந்து, "அந்நாளும் நாளை அளவு" என்று கூறினன் என்று கவிகூறுவது மிகவும் வியக்கத்தக்கது. ஏனெனில், அந்தணனை அவ்வாறு கூறும்படி செய்வதால், இருதுபன்னன் விரைவில் விதர்ப்பநாட்டையடைய விரும்பி, மிக்க விரைவில் தேரைச்செலுத்தும் திறன்வாய்ந்த தேர்ப்பாகனையே தன்தேரைச்செலுத்த ஏவுவன்என்பதும், அவ்வாறு அவன்ஏவுங்கால் நளனையன்றி அத்தொழிலில் வல்லார் பிறர் இன்மையால், நளனே அதற்கு இசையவேண்டி நேரிடும் என்பதும் கருதியே புகழேந்திப்புலவர், "அந்நாளும்நாளை அளவு" என்னும் சொற்களை அழகு பெற அமைத்தனர்.

வேத மொழிவாணன் மீண்டுஞ் சுயம்வரத்தைக்
காதலித்தாள் வீமன்றன் காதலியென்-றோதினன்
என்செய்கோ மற்றிதனுக் கென்றா னிகல்சீறும்
மின்செய்த வேலான் விரைந்து. 39.

பதப்பிரிவு:—வேதம் மொழி வாணன் மீண்டும் சுயம்வரத்தை காதலித்தாள் வீமன்தன் காதலி என்று ஓதினன் என் செய்கோ மற்று இதனுக்கு என்றான் இகல் சீறும் மின் செய்த வேலான் விரைந்து.

பதவுரை

இகல் - பகைவர்களாகிய இருளை,
சீறும் - கோபித்து நீக்கும்,
மின்செய்த - (வெற்றியாகிய) பிரகாசத்தை வீசிய,
வேலான் - வேலாயுதத்தைத் தாங்கிய இருதுபன்னன்,
விரைந்து - அவசரப்பட்டு,
"வேதம் - வேதத்தின் நுண்ணிய பொருள்களை,
மொழி - (ஆராய்ந்து) கூறுகின்ற,
வாணன் - வாழ்க்கையை யுடையவனுகிய புரோகிதன்,
வீமன்தன் காதலி - வீமராசனுடைய புத்திரி,
மீண்டும் - மறுபடியும்,
சுயம்வரத்தை - சுயம்வரம் நாட்டுவதை,
காதலித்தாள் - விரும்பினுள்,
என்று ஓதினன் - என்று கூறினன்;
மற்று - அப்படியிருக்க,
இதனுக்கு - இந்தச் சுயம்வரத்தின் பயனையடைதற்கு,
என் செய்கோ!" - (யான்) யாது செய்வேன்!
என்றான் - என்று கூறினன்.

விரிவுரை:—இக்கவியில் அமைந்துள்ள சொல் நயம் ஆராயத்தக்கது. அந்தணன், 'வீமன்தன் காதலி மீண்டும் சுயம்வரத்தைக் காதலித்தாள்,' என்று சொல்லியவுடனே, முன்னர்த் தமயந்தியை மணக்கவிரும்பி அவள் சுயம்வரத்திற்குச் சென்றிருந்தும் அவள் மாலை பெறாது மனவருத்தத்துடன் தன்னகருக்குத் திரும்பியவனுகையால், இப்பொழுது அந்தணன் கூற்றை மெய்யெனக்கொண்டு தனக்குள் இவ்வாறு பரபரப்புடன் கூறிக்கொண்டனன் எனக் கவி மாந்தர் மன நிலையினை நன்கு ஆராய்ந்து கூறியிருத்தல் கற்போர்க்கு இன்பமும் வியப்பும் விளைக்கத் தகுந்தது. "ஒருபெண் இரண்டாம் சுயம்வரத்தை யேற்றுக் கொள்வது நூல் வழக்கிலுமில்லை; உலகவழக்கிலும் கேள்விப்பட்டிலோம். அங்ஙனமிருக்க அயோத்தி மன்னனுகிய இருதுபன்னன் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் என்று அந்தணன் உரைத்ததை மெய்யென வெங்ஙனங் கொள்ளுதல் கூடும்?" என்று இந்நூலைக் கற்போர் எண்ணுதல்கூடும். அவர்களுக்கு அவ்வித எண்ணந்தோன்றுதபடி கவிசொற்றொடர்களை அமைத்திருக்கின்றார். கவி, அந்தணனை இருதுபன்னனே 'வேதமொழி வாணன்' என்று குறிப்பதாகக் கூறுகின்றார். ஆதலின், வேதத்தின் நுண்பொருளை நன்காய்ந்து, அவ்வேத நெறியில் தானொழுகியும் பிறரையொழுகும்படி செய்தும் வருதலையே தன் வாழ்க்கையாகக் கொண்டவன் அந்தணன் என்பதும், அத்தகைய சீரிய ஒழுக்கமுடையோன் மெய்யன்றிப் பொய் புகலான் என்பதும் அத்தொடருக்குப் பொருளாகக் கொண்டு இருதுபன்னன் தனக்குள் தானே கூறிக் கொண்டான் என்பது உய்த்துணரக் கிடக்கின்றது. இருதுபன்னன், 'இகல்சீறும் மின் செய்த வேலான்' எனினும், பகைவரையடக்குந் திறல் அவனுக்குண்டேயன்றித் தன் மனத்தையடக்குந் திறன் பெற்றிலன் என்பதும், தாம் விரும்பிய மங்கையர்பால் மனத்தைப் போக்கியவர் பெருவீரரெனினும் தம் வன்மையிழந்து பெரிதும் ஆராய்ச்சியின்றிக் காரியங்களைச் செய்வாரென்பதும் தோன்றக் கவிஇங்ஙனங் கூறியதும் வியக்கத்தக்கதே. விரைந்து கூறினன் என்னும் சொற்களின் அமைப்புஅப்பொழுது இருதுபன்னன்கொண்ட அமைதியின்மையை—பரப்பரப்பை—இனிது விளக்கி நிற்கின்றது. வாணன் என்னுஞ்சொல் வாழ்நன் என்பதன் மரூஉவாகும். இச்சொல் மதிவாணன், கவிவாணன், அம்பலவாணன், தஞ்சைவாணன், பாவாணன் எனப் பிற சொற்களோடமைந்து, வாழ்கின்றவன் எனும் பொருள் தந்து நிற்கின்றது.

குறையாத கற்பினுள் கொண்டானுக் கல்லால்
இறவாத வேந்திழையா ளின்று—பறிபீறி
நெல்லிற் பருவரா லோடு நெடுநாடா
சொல்லப் படுமோவிச் சொல். 40

189045

பதப்பிரிவு:—குறையாத கற்பினுள் கொண்டானுக்கு அல்லால் இறவாத ஏந்து இழையாள் இன்று பறி பீறி நெல்லில் பருமை வரால் ஓடும் நெடுமை நாடா சொல்லப்படுமோ இ சொல்.

பதவுரை

பறி - (மீன் பிடிப்போர் கட்டுகின்ற) கூடையை,
பீறி - கிழித்துக்கொண்டு,
நெல்லில் - நெல்வயல்களில்,
பரு வரால் - பருமையான வரால் மீன்கள்,
ஓடும் - (நீரில் நீந்தி) ஓடுகின்ற,
நெடு நாடா - (நீர் வளப்பமாகிய) பெருமையுடைய அயோத்திக்கு அரசனே,
குறையாத - பின்னப்படாத,
கற்பினுள் - கற்பை உடையவளாகிய தமயந்தி,
கொண்டானுக்கு - தன்னை மணம்புரிந்துகொண்ட நாயகனிடத்து,
அல்லால் - அல்லாமல்,

இறவாத - அவனைக் கடந்து (மற்றவர்களிடத்தில் மனம்) செல்லாத,
ஏந்து இழையாள் - (அழகைத்) தாங்கியஆபரணங்களை யுடையவள்,
இன்று - (அவள் தன் நாயகனை விட்டுப் பிரிந்து வருந்தி இருக்கும்) இந்த நாளில்,
இ சொல்-(இரண்டாம் சுயம்வரம் என்னும் அசம்பாவிதமான) இந்தச் சொல்லானது,
சொல்லப்படுமோ - (அவளைப் பற்றிச்) சொல்லக் கூடுமோ ?

விரிவுரை:—நளன், அந்தணன் கூறிய கூற்றையும் அதனால் இருதுபன்னன் கொண்ட மனமயக்கத்தையும்அறிந்தான் என்பதனைக் கவி குறிப்பாகஉணர்த்தி மேற் செல்லுகின்றமை ஈண்டுப் பாராட்டத்தக்கது. இச்செய்யுளில் அந்தணன் கூற்றை உண்மையெனக் கொண்டு மனமயக்கங் கொண்ட இருதுபன்னனது எளிமையை யுணர்ந்த நளன் அவன் அறியாமைக்கு இரங்கிக் கூறுவதுபோல் புலவர் இச்செய்யுளை அமைத்திருக்கின்றனர். இருதுபன்னன் தமயந்தியின் இரண்டாம் சுயம்வரத்தைப்பற்றி நளனை ஏதும் வினவினானல்லன். அங்ஙன மிருந்தும், நளன் அம்முறையில் அவனுக்குப் புத்தி புகட்டத் துணிந்தது சரியோ எனில், உலகியலை நோக்க அது சரி யென்றே தோன்றுகின்றது. மக்கள் தம் அன்புக்குரியவர்களைப்பற்றிப் பிறர் குறைவாக வெண்ணுங்காலத்தில் அங்ஙனம் எண்ணுபவர்கள் அறியாமையை அவர்களுக்குக் குறிப்பாக உணர்த்தி, அங்ஙனம் கருதுதல் பிழையென்று கூறுதல் இயல்பு. பெருநாட்டைக்காக்கும் மன்னனாயினும், நீ சிறிதும் ஆராயாமல் செயல் புரியும் குணமுடையவன் என்பது தோன்ற, நளன் 'நெடுநாடா' என இருதுபன்னனை விளிப்பதும் கவனித்தற்குரியது. அதுவுமன்றி, வரப்படாது என்று தடுப்பதற்கமைந்த பறியைத் தன் கொழுப்பினால் கீறிக்கொண்டு வயலில் பாய்கின்ற வரால் மீன்களை உடைய நாட்டினது தன்மையை வரம்பு கடந்து பிறன் மனையை மணக்கவிழைகின்ற அம்மன்னனிடத்தும் காணலாம். முன், "பிள்ளை மீன் புள்ளரிக்கும் நாடன் திருமடந்தை" என்றதுபோல் இதுவும் உள்ளுறை உவமையின்பாற்படும்.

இலக்கணம்

சென்றவாரம், உதடு என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள உகரம் குறுகி உச்சரிக்கும் என்றும், ஆனால் உதவு என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள உகரம்குறுகி உச்சரிக்காமல் தன் ஒரு மாத்திரையையும் பெற்றே ஒலிக்கு மென்பதையும் சொன்னேன். டு என்பது ட் உ என்ற இரண்டு எழுத்துக்களால் ஆனது. அந்த ட் என்னும் மெய், க் ச் த் ட் ப் ற் என்னும் ஆறு எழுத்துக்களில் ஒன்றுதலால், வல்லின மெய். ஆதலாற்றான் உதடு, என்னுஞ் சொல்லின் ஈற்றிலுள்ள உ குறுகியது. உதவு என்பதில் ஈற்று உகரம் வ் என்னும் இடையின மெய்யின்மேல் ஏறியிருக்கின்றது. இடையின மெய்யின்மேலும் மெல்லின மெய்யின் மேலும் ஏறிய உகரம் ஈற்றில் வந்தாலும் குறுகாது. அவைகளெல்லாம் முற்றியலுகரங்கள்.

எனவே, குற்றியலுகரத்தின் இலக்கணம் இது:—

I. க் ச் ட் த் ப் ற், என்ற ஆறு வல்லின மெய்களில் ஏதாவது ஒன்றின்மேல் ஏறிக் கு சு டு து பு று என நிற்றல் வேண்டும்.

II. அப்படி வல்லின மெய்யின்மேல் ஏறி வார்த்தைக்குக் கடைசியில் நிற்க வேண்டும்.

III. அப்படி நிற்கின்ற வார்த்தை இரண்டே எழுத்துக்களையுடைய வார்த்தையா யிருக்குமானால், முதல் எழுத்து நெடிலாக இருக்கவேண்டும்.

IV. இரண்டிற்கு மேற்பட்ட எழுத்துக்களையுடைய வார்த்தையா யிருக்குமானால், அவ்வெழுத்துக்கள் எவையாயிருந்தாலும், அவ்வார்த்தையின் ஈற்றில் வல்லின மெய்யின்மேல் ஏறிவரும் உகரம் குற்றிய லுகரமே.

குற்றியலுகரம் என்பது இன்னதென்பதைக் கவனித்தோம். இனி அந்தக் குற்றியலுகரம் தான் ஏறி இருக்கும் மெய்யெழுத்திற்கு முன் நிற்கும் எழுத்தினால், அதாவது அந்த மெய்யெழுத்தைத் தொடர்ந்து நிற்கும் எழுத்தினால் வெவ்வேறு பெயர் பெறுவதைக் கவனிப்போம்: சுக்கு, கச்சு, மட்டு, பத்து, உப்பு, பற்று, என்னும் சொற்களைக் கவனியுங்கள். இச்சொற்களில் குற்றியலுகரம் ஏறியிருக்கின்ற மெய்யெழுத்தை க், ச், ட், த். ப், ற் என்னும் வல்லின மெய்யெழுத்துகள் தொடர்ந்து வந்திருக்கின்றன அல்லவா ? இவ்வாறு வல்லின மெய்யெழுத்துகளால் தொடரப்பட்டு வரும் குற்றியலுகரம் வன்தொடர்க் குற்றியலுகரம் என்று சொல்லப்படும். சங்கு, பிஞ்சு, வண்டு, சிந்து, கம்பு, கன்று என்னுஞ் சொற்களில் உள்ள குற்றியலுகரம் ஏறியிருக்கும் மெய்யைத் தொடர்ந்து ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் மெல்லின மெய்யெழுத்துகள் வந்திருக்கின்றன. ஆகவே, இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரத்தை மென்தொடர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகிறோம். நொய்து, மார்பு, போழ்து, ஞொள்கு, பல்கு என்னுஞ் சொற்களைக் கவனியுங்கள். இவற்றிலுள்ள குற்றியலுகரம் ஏறிய மெய்யெழுத்தைத் தொடர்ந்து இடையின மெய்யெழுத்துகள் வந்திருப்பதால் இவற்றை இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகிறோம். பாகு, பாசு, ஏடு, போது, ஆபு, சேறு என்னும் சொற்களில் ஈற்றில் உள்ள குற்றியலுகரம் ஏறிய மெய்யெழுத்தை பா, ஏ, போ, ஆ, சே என்னும் உயிர்நெட்டெழுத்தும் உயிர்மெய் நெட்டெழுத்தும் தனித்தனி தொடர்ந்து வந்திருக்கின்றன. ஆகையால், இச்சொற்களில் ஈற்றில் உள்ள குற்றியலுகரத்தை நெடில் தோடர்க் குற்றியலுகரம் என்கிறோம். அஃது, இஃது என்னுஞ் சொற்களில் உள்ள குற்றியலுகரம் ஏறிய மெய்யைத் தொடர்ந்து ஆய்த எழுத்து வந்துள்ளது. இதனால், இச்சொற்களில் உள்ள குற்றியலுகரத்தை ஆய்தத்தோடர்க் குற்றியலுகரம் என்று சொல்லுகிறோம். வரகு, அரசு, குருடு, பிறிது,மரபு, பயறு என்னும் சொற்களில் குற்றியலுகரம் ஏறியுள்ள மெய்யெழுத்தைத் தொடர்ந்து ர, ரு, றி என்னும் உயிர்மெய் யெழுத்துகள் வந்திருக்கின்றன. ஆனால், இவ்வுயிர்மெய்யெழுத்துகளைக்கொண்டு இச்சொற்களில் வந்துள்ள குற்றியலுகரத்தை உயிர்மெய்த்தொடர்க் குற்றியலுகரம் என்று சொல்லிவிடுதல் கூடாது. ஏன் என்றால், இச்சொற்களில் குற்றியலுகரம் ஏறியுள்ள மெய்யெழுத்தைத்தொடர்ந்து நிற்பவை உயிர்மெய்யெழுத்துகளாயினும், ஓசையைக் கவனிக்கும்போது உயிர் ஓசையே அவ்வாறு தொடர்ந்து நிற்பதை உணரலாம். உதாரணமாக, அரசு என்னும் பதத்தை எடுத்துக் கொள்ளுவோம். இச்சொல்லில் உள்ள எழுத்து

களை ஓசைக்கு ஏற்றபடி பிரித்து அமைப்போமானால் அவை அ ர்அ ச்உ என அமையும். இப்பொழுது கடைசியில் உள்ள உ என்னும் எழுத்துக்குற்றியலுகரம். அதற்குப் பக்கத்தில் அமைந்துள்ள ச் என்னும் எழுத்து அந்தக் குற்றியலுகரம் ஏறியிருந்த மெய்யாகும் அந்த மெய்யெழுத்தைச் சார்ந்து நிற்கும் ஓசை அ என்னும் உயிர் ஓசையே அன்றி,வேறெந்த ஓசையுமன்று. ஆகையால், இப்படி உயிர்மெய்யெழுத்தால் தொடரப்பெற்ற குற்றியலுகரத்தை உயிர்த்தோடர்க் குற்றியலுகரம் என்றே சொல்லுகிறோம்.

எனவே குற்றியலுகரமானது தான் ஏறியிருக்கும் மெய்யெழுத்திற்குப் பக்கத்தில் அமையும் எழுத்தினால் ஆறுவகைப்படும் என்பதை அறிகிறோம். அவை வன்தோடர்க் குற்றியலுகரம், மென்தோடர்க் குற்றியலுகரம், இடைத்தோடர்க் குற்றியலுகரம், நெடில் தோடர்க் குற்றியலுகரம், ஆய்தத்தோடர்க் குற்றியலுகரம், உயிர்த்தோடர்க் குற்றியலுகரம் என்பவை.

1. ஈற்றிற்கு அயலெழுத்து வல்லின மேய் எழுத்தாக இருந்தால், வன்றொடர்க் குற்றியலுகரம்:—பத்து, கட்டு, கச்சு, பற்று.

2. ஈற்றிற்கு அயலெழுத்து மெல்லின மேய்யாக இருந்தால் மென்தொடர்க் குற்றியலுகரம்:—வண்டு, பங்கு, பத்து, சென்று, பஞ்சு.

3. ஈற்றிற்கு அயலெழுத்து இடையின மேய்யாக இருந்தால், இடைத்தொடர்க் குற்றியலுகரம்:—கொய்து, நல்கு, போழ்து.

4. ஈற்றிற்கு அயலெழுத்து ஃ என்னும் ஆய்த எழுத்தாக இருந்தால், ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம். எஃகு, அஃது.

5. ஈற்றிற்கு அயலெழுத்து மெய்யெழுத்தாக வேனும் ஆய்தவெழுத்தாகவேனும் இல்லாமல் எந்த உயிர்மெய்யா யிருந்தாலும், உயிர்த்தொடர்க் குற்றியலுகரம். அது வல்லினமாயிருந்தாலும் சரி, மெல்லினமாயிருந்தாலும் சரி இடையினமாயிருந்தாலும் சரி குறிலாயிருந்தாலும் சரி, நெடிலா யிருந்தாலும் சரி, அந்த ஈற்றுக்கு அயலெழுத்து உயிர்மெய் யெழுத்தா யிருந்தால் அந்தத்தொடரிலுள்ள உகரம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரந்தான்:—

படகு, கழுது, கிணறு, பலாசு, இவையெல்லாம் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்களே. படகு, என்னும் சொல்லில் ஈற்றிற்கு அயல் எழுத்தாகிய ட வல்லினமாயிருப்பதால் அந்தக் குற்றியலுகரத்தை வன்தொடர்க் குற்றியலுகரம் என்று எண்ணுதீர்கள். ட, வல்லின உயிர்மெய். எனவே இது உயிர்த்தொடர்தான். வன்தொடராக வேண்டுமானால், ஈற்றிற்கு அயலெழுத்து வல்லின மெய் ஆக அல்லவோ இருக்கவேண்டும்? உட்கு, என்றிருந்தால் ட் என்பது வல்லின மெய்யாதலால் இது வன்றொடர்க் குற்றியலுகரம். அவ்விதமே, கழுது, இடைத்தொடர் அன்று; கிணறு மென்றொடரன்று. இவைகளும் உயிர்த்தொடர்களே.

பலாசு என்பதுகூட உயிர்த்தொடர்தான். நெடில் தொடர் அன்று. ஈற்றிற்கு அயலெழுத்து, பலாசு, இறும்பூது, என்னும் சொற்களில்போல் நெடிலாக இருந்தால் அது நெடிற்றொடர்க் குற்றியலுகரம்என்று நினைக்கக்கூடாது.

6. இரண்டே எழுத்தைஉடைய சொற்களின்கடைசியில் உள்ள உகரம் குற்றியலுகரமாயிருக்கும்போது முதலெழுத்து நெடிலாகத்தான் இருந்து தீரவேண்டி இருக்கின்றது. அப்பொழுதுதான் அதற்கு நெடிற்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்.

சீர்திருத்தம்

Man: The Reformer—by Emerson.

169 பக்கத் தொடர்ச்சி

சீர்திருத்த முயற்சிகள் யாவும் முதலில் உற்பத்தியாவதற்கும், பின் ஒழுங்குற நடைபெறுவதற்கும் ஆதாரமாயிருக்கின்ற சக்தி யொன்றுளது. அச்சக்தியாதெனில், தக்கதோர் தறுவாயில் தோன்றுதற்குரிய அலகிலாப்பெருமை மனிதனில் இருக்கின்றதென்று அந்தரங்கபூர்வமாய் நம்புகின்ற ஓர் நம்பிக்கையாகும். மானுடப்பெருமையை நம்முளே மதித்திடல் வேண்டுமென்பது யாவருக்கு மொரு கழிபெருங் கடமையாகாதோ? நீடிய நிலங்கள் தனக்குடைமையாயிருப்பதால், எனக்கயலே யெவனும் தான் பணக்காரனென் றெண்ணுதற் கிடந்தரேன். அவன் செல்வம் எனக்கிலதேனும், குறையோ எனக்கி யாதுமிலதென்று அவன் உணருமாறு செய்தல் என் கடன். கையிலொரு காசுமிலனேனும், யான் உண்பதுவுங்கூட அவனிட்டவூணேனும்,எனதயலில் ஏழை யவன் [illegible]ற்று, ஒரு பெண்ணேனும் குழந்தையேனும் பக்திநெறியிலே புதுமுறை குறிக்குமாயின், தரும சிந்தனையிலே என்னிற் சிறிது செவ்விய நெறிகாட்டுமாயின், அன்றே நான் அன்னாரடி தொழுகின்றேன். அன்று தொட்டு என் வாழ்க்கை அடியோடு மாறினும் மாறுக.

நற்குணங்கள் பல இவ்வமெரிக்கா தேயத்தார் பெற்றிருந்தபோதிலும், முன்னுரைத்த நம்பிக்கையும் உற்சாகமும் இவர் பெற்றிலர். தமக்குரிய பொருளிழந்து உழல்கின்ற நம் சொற்கள் பலவற்றுள்ளே இவ்விரண்டுசொற்களைப்போல் தம்பொருள்முழுதும் மறைந்து தவிக்கின்ற சொற்கள் வேறிரண்டறியேன். காவிரிப்பூம்பட்டினத்தையும் தென்குமரி யாற்றையும் போல் இவ்விரண்டையும் இன்றுபழையன கழிந்தவற்றோடு கலந்து பேசுகின்றோம். ஆயினும், இவைகளின் பொருள் மிகவும் அகலமும் இந்நாள் உலகத்திற்கு இன்றியமையாப் பொருத்தமும் உடைத்து. அமெரிக்கர்களுக்கு நம்பிக்கை யென்பது மருந்துக்குமுண்டோ வென்னும்படி யாய்விட்டது. பணத்தினது சக்தியையே பற்றி வாழ்கின்றனர். நல்லுணர்வென்பது அன்னவரை நாடுதலருமை. ஜன சமூகத்தைச் சீர்பெற வளர்ப்பதும், சண்டமுகில் உரங்கெட அடக்குவதும் ஒரு சொல்லா லாகுமென நினைக்கின்றனர். இத்தகையதொரு நம்பிக்கையற்ற

நிலையை, யாவரினு மிகுதியாய்க் கல்விமான்கள் புத்திமான்கள் முதலியோர் குழாத்திடையே காண்கின்றோம். ஊன்றிய அறிவாளிகளு மிருக்கின்றனர்; மனோபாவ மிகுந்த கவிகளு மிருக்கின்றனர்; பண்படா வெண்ணமெல்லாம் பற்றியாட்டத் தொல்லைநாள் வழக்கமென்னும் வழிகளிலே நடந்தறியாது தந்நினைவே தலைக்கேறித் திரிதரும் காளையரு மிருக்கின்றனர். இவர்களுடனெல்லாம் சிறிது நேரம் பேசிப்பாருங்கள். நம்பிக்கையற்ற தற்காலத்தின் தன்மை எத்துணை அற்பமானதென்றும், அவர்களுடைய இயந்திரங்களுந் தந்திரங்களும் அரசென்றும் ஆட்சியென்றும் கூட்டுறவு வாழ்க்கையென்றும் நிறுவியுள நிலையங்கள் யாவும் காகிதக் கட்டடங்களேயென்றும் ஓரே நொடியில் உணர்ந்தறியலாம். அஃதுணர்ந்த நான், வீரனொருவன் பெருந்தகைக் கொள்கையொன்றால் எத்துணைக் காரியத்தைச்சாதிக்க இயலுமென்பதையும் நன்கு காண்கின்றேன். சாத்தியமான காரியங்களைச் சாமர்த்தியமாகச் செய்கின்றவர்கள் (Practical men), எண்ணமுங்கொள்கையுமே யாவற்றிற்கும் முதலென விவகரிக்கும் எம்மனோர்உரைகளை நம்பாததற்குக் காரணத்தை யான் ஒருவாறுணர்கின்றேன். எவ்விதக் கருவிகளைக்கொண்டு எங்கள் கருத்தை யாம் நிறைவேற்ற முயல்கின்றோமென்பதை யறிவதற்குரிய சக்தியவர்களுக்கில்லை. "மலையும் யாறும் பூமியும் விண்ணும் உன்னாற் படைக்க இயலுமா? உன்னிடத்திலிருக்கின்ற உளியும் சுத்தியும் உலையும் திராவகங்களும் புதியதோருலகத்தைப் படைத்தற்குதவாவே! ஆதலின், மூடர்களும் பிணி திணிந்த பிண்டங்களும் சுயநயப் பேயர்களும் ஆகிய ஆடவரும் பெண்டிரு நிறைந்த இந்த ஜனத்தொகையைக் கைக்கொண்டோ நீ அவ்வானாட்டின் வளமெல்லாம்பெற்று வாழும்படி வைப்பதற் கிருக்கின்றாயெனப் பிதற்றுகின்றனை?" என நம்பிக்கையின்றி நகுகின்றார் அச்சாத்திய காரியச் சாமர்த்தியசாலிகள். ஆனால், நம்பிக்கையும் உற்சாகமுமுடையவனோ, அவ்விந்திரலோகம் இங்கியலுமென எண்ணுவதோடமையாது ஏற்கனவே அதுவந்து எய்தவும் துவக்கிவிட்டதாகக் கருதுகின்றான். எதனால்? இராச்சிய தந்திர நிபுணர்கள் தங்கள் கைவசமாக்கிக்கொண்டு உபயோகப்படுத்துகின்ற மனிதராலும் பொருளாலுமன்று; கொள்கைகளின் சக்தியால் தம்மினின்று தாமே உயருமாறு முற்றிலும் மாற்றப்பெற்ற மானிடத் தொகுதியன்றோ அந்நிலை வாழ்க்கைக்கு மூலமாகும்? சமயோசித சூழ்ச்சிகள் யாவும் பயனற்றுப் பிறங்கிட முன்னேகுந் தூய ஆற்றல் கொள்கைக்கு உளது. நெடுநாள் கழியுமுன் நமது அரசியல் வாதங்களிலும் நமது ஜன சமூக வாழ்க்கையிலும் அன்பென்ப ததிக்க ஒரு பெரும் பகல்விடியுமென்றே நினைக்கின்றேன். எல்லாத்தீமைக்கும் மருந்தாய் இயற்கையே யெடுத்தளிப்பது இவ்வன்பு. நாமனைவரும் காதலர்களா யிருத்தல்வேண்டும். உடனே அசாத்தியமானவைகளெல்லாம் சாத்தியமாய் விடுகின்றன. நாம்ஒருவரையொருவர் நம்பாததால்விளைகின்றவீண்செலவுசிறிதன்று. நியாயஸ்தலங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் நாம்தொலைக்கின்ற பணம் அத்தனையும் பாழ். நாம் நம்பாததாற்றான், கள்வனையும் கொள்ளைக்காரனையும்நாமே படைக்கின்றவர்களாகின்றோம். படைத்த இக்குலம் கிளைத்து வளர நியாயஸ்தலங்களும் சிறைச்சாலைகளும் பெரிதும் உதவுகின்றன. கிறிஸ்தவர்கள் வசிக்கின்ற இவ்வுலகத்தின் பாகமெல்லாம் அன்பையே நம்பி ஓர் ஆறு மாதம் வாழட்டும். திருடனும் தூர்த்தனும், கண்ணும் கண்ணீருமாய் நம்மயலே வந்து நின்று தாமாகத் தொழுவார்கள். அவர்களுடைய சர்வ சக்தியையும் நம்மூலமாக உலகத்திற்கு உதவவும் உதவுவார்கள். உழைக்கும் ஆடவரும் பெண்டிரும் நிரம்பிய இவ்விசாலமான ஜன சமூகத்தைப் பாருங்கள். நாம் அவர்களை நமக்கு உழைக்கும்படி விடுகின்றோம்; அவர்களைவிட்டு நீங்கித் தனியே வாழ்கின்றோம்; அவர்களைத் தெருக்களில் சந்திக்குங்கால் வணக்கங் காட்டுகின்றோமில்லை. நாம் அவர்கள் புத்தி சாதுரியங்களைப் போற்றுவதில்லை. அவர்களுக்கேற்படும் நன்மைகளைக்கண்டு களிகூர்வதுமில்லை; அவர்கள் நம்பிக்கையை வளர்ப்பதுமில்லை. மக்கட் கூட்டத்திடையே அவர்களுக்கு அரும்பொருளாக இருப்பதையளிக்க வாக்களிப்பதுமில்லை. இவ்வாறேநாம் உலகந்தொடங்கிய நாள்தொட்டிதுகாறும் சுயநலமுள்ள பணக்காரனைப்போலவும் அரசனைப் போலவும் நடித்து வருகின்றோம். ஒவ்வொரு வீட்டிலும் கணவன்மனைவிபருக் கேற்படுமமைதி அவ்வவ் வீட்டிலுள்ளாருடைய பொறுமையாலும் தந்திரத்தாலும், சோம்பலினாலும் வேலைக்காரருக்குண்டாக்கும் வெறுப்பினாலும் கெடுக்கப்படுகிறது. எவரேனும் குடும்பஸ்திரீகள் இருவர் சந்திக்கும்போது அவர்கள் எவ்வளவு சீக்கிரத்தில் தங்கள் கணவரால் ஏற்படுங் கஷ்டங்களைப்பற்றிப் பேச ஆரம்பிக்கிறார்கள்என்பதை கவனியுங்கள். தொழிலாளர் கூட்டங்கள் ஒவ்வொன்றிற்குமிடையே பணக்காரன் இருக்கும்போது தான் தன் நண்பர்களுக்கிடையே இருப்பதாகக் கருதுவதேயில்லை. ஆதலால், சமயம் நேர்ந்தபோது அத்தொழிலாளர் அவனுக்கு எதிரிகளாகின்றார்கள். பொது ஜனங்களுக்கிடையே பரவும் இராஜ தந்திர சூழ்ச்சியால் இந்த ஜனங்கள் சுயகாரிய தந்திரிகளால் ஆளப்பட்டு, நியாயத்திற்கும் நன்மைக்கும் நடுநிலைக்கும் எதிராக இவர்களைச் செலுத்தித் தங்களுடைய இலாபத்திற்கு இரையாக்கிக் கொள்ளுகின்றார்கள் என்று குறை கூறுகின்றோம். ஆனால், மூடர்களும் துஷ்டர்களும் தங்களை ஆளவேண்டும் என்னும் இஷ்டம் அவர்களுக்கில்லை. இந்த மூடர்களும் துஷ்டர்களுமே தங்களுக்குப் பிரதிநிதிகளாக இராஜ சபைகளுக்குப் போகவேண்டுமென்று அவர்கள் விரும்புவதில்லை. எனின், 'இவர்களுக்கு ஏன் ஓட்டுக்கொடுத்தார்கள்?' என்றாலோ, அன்பும் அமுதும் ஒழுகுவதுபோன்ற போலிக்குரலால் 'கெஞ்சிக்கெஞ்சிக்' கேட்டதாற்றான். ஆனாலென்? நெடுநாள் இந்த வகையிலே அவர்கள் ஓட்டுப் பெற இயலாது.

நம்மிடத்திலிருந்து அன்பு மாத்திரம் மக்களிடைப் பாய்ந்து பரவட்டும். நாளொன்றில், இதுவரையில் இவ்வுலகம் கண்டிராத மாறுதலடைந்துவிடும். அரசாட்சியின் கருத்தெல்லாம் ஏழையையே நினைக்கட்டும். எவ்வெவர்தம் குரலெல்லாம் அவன் குறையே கூறட்டும். மண்ணிற் பிறந்தோனெவனும் தன் வயிற்றுச் சோற்றுக்குத் தவிக்கப்படாது. சொத்து விஷயமாகச் செய்கின்ற சட்டங்களில் இனியேனும் ஒரு முக்கியமான விஷயத்தை நினைவிற் கொள்ளுதல் நலமாகும். அது, செல்வவந்தர்கள் தாங்களாகத் தங்கள் பொருளை அளிப்பதாக இருத்தல்வேண்டுமேயன்றி, ஏழைகளே அதனை மன்றாடிக் கேட்டுக் கவர்ந்து

கொள்ளலா யிருத்தல்கூடாது. எந்நாளும் எங்கும் யாவற்றையும் கொடுப்பதிலே பழகிப்பழகி நம் புது வாழ்வை ஆரம்பிப்போம். யாராயிருப்பினும் சரி; தனக்குவேண்டுவதற்குமேல் பொருளை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பது தரும நெறியாகும். நான் ஓர் உலக காதலனாயிருக்கின்ற உணர்ச்சி பெண்பால் எழட்டும். என்னால் இவ்வுலகம் நன்மையுற்றதென்பதை யான் காணல்வேண்டும். அந்தக் காட்சியே தான் என் கைம்மாறு மாகும். நாஸ்திகர்களாயும் சத்துருக்களாயும் நெடுநாள் நாம் வசித்து வருகின்ற இக்கிழ வுலகத்தின் நரையுந்திரையும் மாறி, அன்பான புதியதொரு முகம் பொலிவுறப்பெறும். இராஜ்ப தந்திரிகளினது வீணான சூழ்ச்சிகளும், கையற்ற சைனியங்களும், காப்பற்ற அரண்களும் அகன்று தொலைய அன்பெனும் இச்சிறு குழந்தை ஆட்சி பெறுவதைக் கண்டக்கால்நமதுள்ளம் களியாதோ? நிமிர்ந்துசென்று தன்வயமாக்கிக்கொள்ள வியலா இடத்தில் இவ் வன்பானது தவழ்ந்தேனும் சென்று தன்னலத்தை யளித்திடுமே! இவ்வன்பானது மற்றெவ்விதச் சக்தியாலும் செய்ய இயலாத கருமங்களைச் செய்து முடிக்கின்றதைக் காண்கின்றோமேயன்றி, எக்கருவிகொண்டு, எம்முறையால், எவ்வாறு அவற்றை அது ஆற்றியதென்று ஆராய்தல் எளிதன்று. செய்பவன் கருவி நிலம் மூன்றும் தானேயாய் நின்று, தன்னையே செய்து அளிக்கின்றதென்றால், இதன் துணை மற்றெந்தச் சக்தியை இயம்புவது? பொதுஜன வாழ்க்கையின் விவகாரங்களில்இவ்வன்பின் தன்மையை அனுசரிப்பது பழையதென்று கழித்துவிட்டு அடியுடனிதனை மறந்துமே போனாம்!

முற்றிற்று

"நோக்கெனும் பாசம்"

ஸ்ரீ ராமபிரானும் ஸ்ரீ சீதாபிராட்டியும் ஒருவரையொருவர் நோக்கிக் கண் கலந்தனர் என்று கூறுமிடத்துக் கம்பநாட்டாழ்வார்,

> பருகிய நோக்கெனும் பாசத் தால்பிணித்
> தொருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்
> வரிசிலை யண்ணலும் வாட்கண் நங்கையும்
> இருவரும் மாறிப்புக் கிதயம் எய்தினர்.

என்று வருணித்துப் பாடுகிறார். அதாவது, சீதாபிராட்டியின் உள்ளமானது அவளது நோக்கு என்னும் பாசத்தாலே இராம பிரானைப் பிணித்துத் தன்பால் ஈர்த்துக்கொண்டது; ஸ்ரீ ராமபிரானது உள்ளமும் அவ்வாறே அவனது நோக்கு என்னும் பாசத்தாலே தேவியைப் பிணித்துத் தன்பால் ஈர்த்துக்கொண்டது. ஆதலின் இவனுடைய உள்ளத்துள் அவளும், அவளுடைய உள்ளத்துள் இவனுமாக அமைய நேர்ந்தது என்பது அழகுற இப்பாடலால் விளக்கப்படுகின்றது.

இங்குப் 'பருகிய' என்னும்சொல் 'நோக்கெனும் பாசம்' என்பதோடு சற்றுப் பொருந்தாததுபோல் காண்கின்றது. ஆனால், உற்றுநோக்கின், அதுவே சால அழகியது என்பது தோன்றும் ஏனெனில், இருவர் கண்களாகிய பாசங்கள்பெரும் ஜடத்தன்மை பொருந்தியனவாக இல்லை. அவையும் உயிர்பெற்று, ஆவல் பெற்று வாரிக்கொண்டு விழுங்குவனபோல எதிரிலே தோன்றிய உருவை அப்படியே உட்கொண்டன என்று சொல்வது எவ்வளவு சிறந்தது? இவ்வாறு கண்முதலிய கரணங்களைத் தனித்தனியே ஓர் உயிர் போல மதித்து அவைகள் ஈசுவரனைக்காணவும் அவன் கருடன்மேலே வருகின்ற 'சிறகொலி'யைக்கேட்கவும் பெருவிடாய்ப் படுகின்றனவாக நம்மாழ்வார் பாடிய பாசுரங்களைப் 'பருகிய'என்றசொல் நினைப்பூட்டுகின்றது. அவ்விதப் பாசுரப் பகுதிகளாவன: (1) உன்னை மெய்கொள்ளக் காண விரும்பும் என் கண்ணே. (2) கண்களால் காண வரும் சொல் என்று ஆசையால் மண்கொண்ட வாமனன் ஏற மகிழ்ந்துசெல், பண் கொண்டப்புள்ளின் சிறகொலிபாவித்துத் திண்கொள்ள ஓர்க்கும் கிடந்து என் செவிகளே.

தவிர, 'பருகிய' என்னும் சொல்லைக்'கண்ணுக்குச் சொல்லி, ஆவலையும் காண்பதாலான இன்ப நுகர்ச்சியின் அளவின்மையையும் காட்டுவதாய்ப் பெருமாள் திருமொழியிலே வருகின்ற "எம்பெருமான் சரிதையைச் செவியால் கண்ணால் பருகுவோம், இன்னமுதம் மதியோம் அன்றே" என்னும் மொழிகளின் பரிமளம் இதிலே கொண்டுவந்து வீசுகின்றார் கம்பநாட்டாழ்வார். இவ்வாறே 'நோக்கெனும் பாசத்தால் பிணித்து ஒருவரை யொருவர்தம் உள்ளம் ஈர்த்தது' என்பதிலும் திவ்யப்பிரபந்த பரிமளம் கமழ்கின்றது. நாய்ச்சியார் திருமொழியிலே "கார்த்தண் கமலக்கண் என்னும் நெடுங்கயிறு படுத்தி என்னை ஈர்த்துக்கொண்டு விளையாடும் ஈசன்" என்று ஆண்டாள் பாடியிருப்பதைக் கம்பநாட்டாழ்வார் நினைப்பூட்டுகின்றனர். வேறோர் இடத்திலேயும் நாய்ச்சியார் "பரமன் வலைப் பட்டிருந்தேன்" என்று பாடியுள்ளதும் கவனிக்கத்தக்கது. 'நெடுங்கயிறு' என்பதால் 'போன இடம் எங்கும் போய்த் தப்பாதபடி அகப்படுத்திக் கொள்ளவற்றான வலை' குறிப்பிடப்படுகின்றது. ஈசனுடைய அருள்நோக்கு யாவரையும் அகப்படுத்திக் கொள்ளும் தகைமையுடையது என்பதையே குறிப்பதான இக்கருத்து ஸ்ரீமத் வால்மீகி ராமாயணத்திலும் அமைந்துளது. "யாரொருவர் ஸ்ரீராமனைக் காணாதாரோ, யாரொருவர் ஸ்ரீராமனாலும் காணப்படாதாரோ, அவரை அவருடைய ஆத்மாவும் வெறுக்கும்" என்ற சுலோகத்திலே 'நான் அவனைக் காணாதிருப்பது கூடுமேனும் பெரியனாய அவனுடைய செங்கண் அருள் நோக்கு வீழாதிருப்பது அருமை' என்பது இந்தச் சுலோகத்தின் கருத்து என்பதை வ்யாக்யானங்கள் விளக்குகின்றன.

திருவாய்மொழியிலே வரும் பாசுரம் ஒன்றையும் அதற்குள்ள வ்யாக்யானங்களையும் இங்குக் குறிப்பது பொருந்தும்; அந்தப் பாசுரமாவது:

"அன்னை என்செய்யில்என்? ஊர்என்சொல்லின்என்? தோழிமீர்என்னை உமக்குஆசையில்லை; அகப்பட்டேன் முன்னை அமரர் முதல்வன் வண் துவராபதி மன்னன் வாசுதேவன் வலையுளே" என்று கூறுவது. முன்காலத்திலே திருவாய்மொழிப் பாசுரங்களை இசையுடன் பாடுவதோடு திருவிழாக் காலங்களிலே கோயில்களிலும் வேறு இடங்களிலும் ஆடி அபிநயித்து ஆனந்திப்பது வழக்கம்; திருவாய்மொழியினைத் தமது தவத்தால் கண்டுகொண்டு உலகுக்கு உதவிய பெரியாராகக் கருதப்படும் ஸ்ரீநாதமுனிகள் பாசுரங்களை அபிநயித்து ஆனந்திக்கவேண்டி அபிநயம் வல்லாளான ஒரு தேவதாசியிடம் சென்றும் வேறுபல இடங்களிலும் சென்றும் கற்றுத்தேர்ந்தனர் என்பது கர்ணபரம்பரையாக

நமக்குக் கிடைக்கும் செய்தியாகும். இவ்வாறே ஏனைய திவ்ய ப்ரபந்தபாசுரங்களும் அபிநயிக்கப்பட்டு வந்தன என்பது பெருமாள் திருமொழியிலே வரும் "பொன்நிற ஆடையைக் கையில் தாங்கிப் பொய் அச்சம் காட்டி நீ போதியேலும் இன்னம் என்கையகத்து ஈங்கு ஒருநாள் வருதியேல் என்சினம் தீர்வன்நானே" என்னும் பாசுரப் பகுதியை ஒட்டிவழங்கும் கதையொன்று நன்கு விளக்குகின்றது. ஸ்ரீபெரியவாச்சான் பிள்ளைகளின் உரையிலே இந்தக்கதை இவ்வாறாகூறப் படுகின்றது: "உஞ்சப்பிள்ளை பாடா நிற்க, எம்பார் பார்த்தெழுந் தருளியிருக்க, இவ்விடத்துக்கு அபிநயிக்கிறவர் காலாலே பாய்ந்து தள்ளுவதாகக்காட்ட (அதாவது,என்சினத்தை உன்னைக் காலாலே பாய்ந்து தள்ளித் தீர்வன் என்பதாகக்கொண்டு அபிநயிக்க) அதைக் கண்டருளி, "கெடுவாய்! அங்ஙனே செய்தாளாகில் அவனுக்குப் பொல்லாதோ? அவனுக்கு அதன்றோதேட்டம்? அங்ஙன் அன்றுகாணும்" என்று கையை இட்டு முகத்தை மறைத்துத் திரியவைத்தருளிக் காட்டினார். (அதாவது கையால் முகத்தை மறைத்துக்கொண்டு பராமுகமாக இருப்பதே அவனுக்கு வருத்தம் தருவது என்பது கருத்து). இதுபோலவே 'அகப்பட்டேன் வாசுதேவன் வலையுளே" என்றும், அடுத்த பாசுரத்திலே "வலையுள் அகப்படுத்திக்கொண்டு" என்றும் வருவதற்கும் ஓர் அழகியகதை ஈடு என்னும் வியாக்கியானத்தில் குறிப்பிடப்படுகின்றது. அதாவது, ஆழ்வார் திருவரங்கப் பெருமாளரையர் வலையாக அபிநயித்துப்பாடாநிற்கத் திருக்கண்களைக்காட்டி அருளினார் எம்பெருமானார்" என்பது.

எம்பெருமானார் என்ற சிறப்பு வாய்ந்த ஸ்ரீராமநுஜர், திருவாய் மொழியிலே மிகவும் ஈடுபட்டவர்; "தென்குருகைப்பிரான் பாட்டு என்னும்வேதப் பசுந் தமிழ்தன்னைத் தம் பக்தி என்னும் வீட்டின்கண் வைத்தவர்; திருவாய் மொழியின் மணம் தரும் இன்னிசைமன்னும் இடம்தொறும் புக்கு நிற்கும் குணம் திகழ்கொண்டல்; மாறன் பசுந்தமிழ் ஆனந்தமே மதமாகக் கொண்ட வேழம்; அவர் ஒரு நாள் தனிப்படத் தமது மடத்தின் கதவைத் தாளிட்டுக்கொண்டு "பிடித்தேன்; பிறவி கெடுத்தேன்; பிணிசாரேன்" என்று தொடங்கும் திருவாய்மொழிப்பாசுரத்தைப் பாடியாடி அநுசந்தியா நிற்க, அங்கு வந்து கதவின் இடுக்காலே உள்ளே நோக்கி அவருடைய முகத்தையும் ஆடிய அபிநயத்தையும் கண்ட 'பிள்ளான்' என்னும் பெரியார் "என்ன? பிடித்தேன் பாசுரமோ" என்றனராம். அதைக்கேட்டதும் பேசுகிறவர்யார் என்று குரலால் அறியாதபோதும் ஸ்ரீராமாநுஜர் இச்சொல் பிள்ளானுடையதேயாதல் வேண்டும் என்றுதுணிந்து, "யார், அது? பிள்ளானோ?" என்றனராம். அவ்வாறு திருவாய்மொழியிலே அபிநயித்து ஈடுபட்ட பிள்ளான், 'வலை' என்பது ஈசனுடைய ஸ்வரூப குணசேஷ்டிதங்களைக் குறிக்கும் என்று உரை கண்டனர். இவ்வுரையை உணராத 'கோயில் அரையர் வலைபாக'வே அபிநயத்தபோது பிள்ளானைப் போலவே திருவாய் மொழியிலே ஈடுபட்டு, திருவாய் மொழிப் பாசுரங்கள் பலவற்றின் கருப்பொருள்களை எடுத்து உபதேசித்து வந்த ஸ்ரீராமாநுஜர் திருக்கண்களையே குறிப்பது 'வலை' என்ற சொல் என்பது மிகவும் பொருத்தமுள்ளதேயாம். இவ்விதம் கண்ணை 'வலை'க்கு உவமை கூறும் கவிச்சுவையை அறிந்தே கம்பநாடரும் "நோக்கெனும் பாசம்" என்று கூறினர் போலும்.

இனி, மூன்றும் அடியைக் கவனிப்போம். இவ்வடிக்கு உரைகாணும் ஸ்ரீமான் வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார் "தலைமகனுக்கு விற்படை கூறியதற்கு ஏற்பத் தலைமகளுக்கு வாட்படை கூறினார்போலும். இங்ஙனம் இருதலையிலும் சிறிதும் வேறுபாடு தோன்றாதுகூறி வருவதனால் தம்பதிகளது ஒப்புமை பெறப்படும்' என்பர். தம்பதிகளின் ஒப்புமை இவரும் படையேந்தி எதிர்த்தனர் என்று கூறுவதால் விளங்கும் என்று இவர் கருதினார்போலும். கம்பநாட்டாழ்வாரோ முன்பாட்டிலே ஒருவரை ஒருவர் பொருதமை கூறினார். அங்கு, ஸ்ரீராமனது கண்ணோக்கினை அம்பாகவும் ஸ்ரீசீதாதேவியின் நோக்கினை நுதிகொள் வேலாகவும் வருணித்தனர். ஆகவே, ஸ்ரீராமபிரானது கையிலுள்ள வில்லை ஒரு படையாகக் கம்பநாடர் கருதவில்லை. 'படையைப் படை'யெனப் பாடுவது அழகாமோ? எனவே, 'வரிசிலைவில்' படையாக இராமனுக்கு அமைந்தது என்று கொள்ளுதல் பொருந்தாது. ஆயின், வரிசிலையண்ணல் என்று 'வரிசிலை' என்ற அடைமொழி கொடுத்தற்குக் காரணம் யாதெனில், ஸ்ரீ சீதாதேவியின் உள்ளத்திலேபுகுந்தது ஸ்ரீராமனுடைய அழகிய உருவம் மட்டும் அன்று; வரிசிலையும் ராமனும் ஒருங்கே அவளது உள்ளத்தில் புகுந்தனர். பிராட்டியின் மனத்திலே வில்லுடன் கூடின இராம உருவம் பதிந்ததுபோலவே ஒள்ளிய கண்களோடுபிராட்டியின் உருவம் இராமனுடைய உள்ளத்திலே உறைந்தது. 'வாள்' என்பதற்கு 'ஒள்ளிய' என்பதேபொருள். இவ்வாறு ஒள்ளிய கண்ணோடு சீதாபிராட்டி இராமனுடைய மனத்திலே பதிந்தமையாலேதான் பின்பு ஏகாந்தத்திலே தன் மனத்திலுள்ள உருவத்தை உற்றுஅறிந்து இவள் இலக்குமி தேவியே யாவாள் என்றான். இராமன்,

> வள்ளற் செங்கைக் கரியவன் மைகுறும்
> வெள்ளப் பாற்கடல் போன்மிளிர் கண்ணினாள்
> அள்ளற் பூமகள் ஆகும்கொ லோஎன
> துள்ளத் தாமரை உள்உறை கின்றதே.

இந்தப்பாடலாலே இராமனது மனத்திலே வாட்கண்ணாளாகவே சீதை புக்கனள் என்பது தெளிவாகின்றது அன்றோ?

இவ்வாறே வரிசிலையோடு இராமன் தேவியின்மனத்திலே புகுந்தான் என்பதை விளக்குவதாயுள்ள 'பொருப்புறழ் தோள்புணர் புண்ணியத்தனு கருப்புவில் அன்று; அவன் காமன் அல்லனே' என்னும் பாட்டிலே சீதைதன் உள்ளத்திலே புகுந்துள்ள உருவம் புண்ணிய தனுவைத்தாங்கிநின்றதாகவே வருணிக்கப்படுகின்றது.

அவ்வாறு பிராட்டி ஸ்ரீராமனுடைய 'வரிசிலை'யை நோக்கியதன் கருத்தை வேறொரு பாடலாலே கம்பர் விளக்குகின்றார்:—

> உரைசெயில் தேவர்தம் உலகு ளான்அலன்
> விரைசெறி தாமரை இமைக்கும் மெய்ம்மையான்
> வரிசிலைத் தடக்கையன் மார்பில் நூலினன்
> அரசிளங் குமரனே ஆதல் வேண்டுமால்.

சீதையின் உள்ளத்திலே இராமபிரானுடைய உருவம் புகுந்ததும், அவள் 'இவன் எனது தூய உள்ளத்திலே புகுதலால் எனக்குரிய மணவாளன் ஆதல் வேண்டும். பிரமரிஷியின் பின் வருகிறான்; மார்பிலே நூல் விளங்குகின்றதே! பிராமணனோ?' என்று ஐயுற இடமின்றி, வரிசிலை ஏந்தியவடிவு, "இராமன் க்ஷத்திரியவீரன்; வில்லை வளைத்து என்னைக் கொள்வான்" என்று உறுதி கூறுவதுபோல விளங்கியது; ஆதலின் வரிசிலையும் அவளுடைய உள்ளத்திலே புகுந்தது. இவ்வாறு மாறிப்புகுந்தன இருவர் வடிவுகள் மட்டும் அல்ல; வரிசிலையும் வாட்கண்ணும் அவை தாம் உட்புகுந்து இருவருக்கும் தைரியம் அளித்தன என்று பின்னர்க் குறித்ததற்கு ஏற்ப, இங்கும் "வரிசிலை அண்ணலும் வாட்கண் நங்கையும்" என்று இயைந்த அடைமொழிகளாக அமைத்துப் பாடுகின்றார்.

இதயம் எய்தினர் என்னும் சொற்களின் அழகும் கவனிக்கத் தக்கது. ஒருவர் எய்தியது வேறொருவரின் இதயம்; அவ்வாறாக அவ்வவர்தத் தமது இதயம் எய்தினால் எப்படியோ அப்படி இன்புற்றனர் என்று தோன்றுமாறு நன்கு அமைவது 'இதய மெய்தினர்' என்னும் சொற்றொடர்.

பதினெட்டாம் பாஷை

இந்த நூதன பாஷையை 15 நிமிஷங்களில் கற்றுக்கொண்டு பேசவும், எழுதவும் ஆரம்பித்துவிடலாம். இந்தப்பாஷையில் வியாபாரரகசியங்களைக் குறித்துக்கொண்டால் பிறர் கண்டுகொள்ள முடியாது. இப்பாஷையில் ஸ்திரீகள் கணவர்களுடன் குடும்பரகசியத்தைப் பேசினால் பக்கத்திலுள்ளவர்கள் ஒற்றுக்கேட்டு பிறரிடம் சொல்லிக் கோள்மூட்ட முடியாது. இது ஓர் அபூர்வ தமிழ்ப்பாஷை. சொல்பகாபிகளே இருக்கின்றன. மூந்துங்கள். விலை அணா 8.

அமிர்த குணபோதினி!

இதுபோன்ற நவீன மாதாந்தர ஸஞ்சிகை இதுவரைத் தமிழில் வெளிவந்ததில்லை. இதிலுள்ள விஷயங்கள் யாவும் வாசிப்பவர்கள் மனதிற்குப் புதியதாகவும் அற்புதமாகவும் புலப்படும். இப்பத்திரிகையில் ஜாதி, மத வித்தியாசமின்றிச் சகல மதஸ்தர்களையும் களிக்கச்செய்யும் வியாஸங்களைப் பிரதிமாத சஞ்சிகையிலும் காணலாம். மாதிரி காபி ஒன்று வாங்கி வாசித்தபின் பிறர் சிபார்சு இல்லாமல் நீங்களே வாங்குவீர்களென்பது நிச்சயம். பிரதி மாதம் 56 பக்கங்களுடன் வெளிவரும். வருஷ சந்தா ரூபா 1. வெளிநாடு ரூபா 1—4—0. மாதிரி காபி இனும்.

10-ம் பதிப்பு] **ஆங்கில ஆசான்** [வந்துவிட்டது

[எமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.]

60-நாட்களில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளக் கூடியவிதமாய் அப்பியாசப் பாடங்களாக வகுத்து முன் பதிப்புக்களைவிட அதிக பக்கங்கள் சேர்த்துப் பெரிய எழுத்துக்களில் அச்சிட்டுள்ளோம். இதுவரையில் 53100 புத்தகங்கள் செலவாயிருப்பதாலேயே இதன் மேன்மை விளங்கும். இப்பத்தாம் பதிப்பு ஆங்கில ஆசான்போல் வேறு எந்தப் புத்தகங்களிலிருந்தும் அவ்வளவு சீக்கிரத்தில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ள முடியாது. நமது முன்பதிப்புப் புத்தகங்களை வைத்திருப்பவர்கள்கூட 10-ம் பதிப்பைப் பார்த்தால் இதிலும் ஒன்று கட்டாயம் வாங்க வேண்டுமென்று எண்ணுவார்கள். இதில் 1-அணா முதல் 3000-ரூபா வரையில் சம்பளம் வாடகைக் கணக்கு உளது. 800-பக்கங்களுக்கு மேல்கொண்ட அழகிய சீமை கலிகோ பைண்டு விலை ரூபா 2.

தி. இராஜகோபால் முதலியார், 302, தங்கசாலைவீதி, மதராஸ்.

கம்பராமாயணம், பாலகாண்டம்.

புதியதோர் வகையினதான ஸ்ரீமான் T. N. சேஷாசலமையர் பதிப்பு. செய்யுள்களுக்குப் பதவுரை கூறாது, பதம் பிரித்தும் தொகை விரித்தும், அன்வயப்படுத்தியும் படிப்பவர் தாமே முயன்று பொருள் தேடுமாறு ஆக்கப்பட்டுளது. கடினமான பதங்களுக்கு உரை சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூ. 3-0-0. தபால் செலவு வேறு.

ஏமாங்கதத்திளவரசன்.

T. N. சேஷாசலம் ஐயர் இயற்றிய நூல். இலக்கிய நலங்கள் யாவும் துலங்குமோர் காதற்கதை. அன்பின் வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்து செய்யும் துன்மதிச் சூழ்ச்சியும், வீரனொருவன் மண்மோகமும், இக்கதையை நிகழ்த்திவைக்கும் பெருமையைப் படிப்பவரே அறிவர். விலை ரூ. 1-0-0.

தபால் செலவு வேறு.

கந்தபுராண வெண்பா.

வெண்பாப் புலி என்ற புகழ்தாங்கிய ஸ்ரீ தி. சு. வேலுசாமிப்பிள்ளை அவர்கள் இயற்றிய நூல் இது. 6-காண்டங்களும், 5665 செய்யுள்களும் கொண்டது. ஓதுதற்கினிய நேரிசை வெண்பாக்களால் ஆயது. கற்றோர் இதயம் களிக்கச் செய்யவல்லது. விலை ரூ. 4-8-0.

தபால் செலவு வேறு.

முருகன், ஓர் உழவன்.

ஸ்ரீமான் K. S. வெங்கட்டரமணி M.A., B.L. ஆங்கிலத்தில் செய்த நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு. ஸ்ரீமதி கிருஷ்ணகுமாரி மொழி பெயர்ப்பாசிரியர். இக்கதையின் அமைப்பும், சொல்லும் வகையும், எளிய நடையும், படிப்பவர்க்குக் களிப்பைத் தரவல்லன. விலை ரூ. 1—8—0.

தபால் செலவு வேறு.

கலா நிலயம், வெள்ளாளர் தெரு, புரசைபாக்கம்; சென்னை.

Our Publications.

Kamban's Kosala.

By T. N. Seshachalam, A succint exposition of the poetic Art and the sublime Political Philosophy of Kamban as can be gleaned out of the first four chapters of Balakandam. Dr. James H. Cousins has written a foreword in terms of appreciation. Price Re. 1.

Thoughts for Statesmen

By T. N. Seshachalam. We who are making large strides towards democratic institutions may well pause and hear, what the great masters **Tocqueville and Montesquieu** have thought and said. Mr. S. Srinivasa Iyengar has introduced this book. Price Rs. 1-8-0.

மேனாட்டுப்பேரறிஞர் நால்வர்

கார்லைல், எமர்ஸன், ரஸ்கின் டால்ஸ்டாய், இவர் தம் கட்டுரைகள் சிலவற்றின் முதனூல் சுவை குறையா மொழிபெயர்ப்பு. விலை 0-8-0.

முப்பெரும் புலவர்

கம்பன், காளிதாசன், ஷேக்ஸ்பியர் ஆகிய பெருங்கவிகள் ஜீவிய சரிதை. விலை அணா 4.

உலக அதிசயம். விலை அணா 4.

விசித்திர விளக்கு.

எளிய தமிழ் நடையிலான அலாவுதீன் என்னும் அரபிக்கதை. விலை அணா 6.

வாழ்க்கைச் சரிதை. விலை அணா 4.

Sambandar (English) விலை „ 4.

Vali (Do) விலை „ 4.

The Educational Publishing Co., *Nungambakam, Madras.*

இந்தியாவிலும் பர்மாவிலும்

எங்கள்

தங்கக்கலன்களும் வெள்ளிக்கலன்களும்

உபயோகத்தோடு சுத்தமும் அழகும் சேர்ந்திருக்குந் தரத்தினை அனைவரும் அறிவர்.

சுத்தம்

சுத்த வெள்ளியும் சவரன் பொன்னுமே உபயோகப் படுத்துகின்றோம். உலோகத்தின் சுத்தத்திற்கு அடையாளமாக நாங்கள் செய்த சாமான்களின்மேல் டையமண்ட் டிரேட் மார்க் காணப்படும்.

அழகு

எமது மாதிரிகள் புதியன. கண்ணைக் கவரும் அழகுடையன. எங்களுக்கே பிரத்தியேகமான இவை, நவத்திலும் நவமான நாகரிகமுடைய வெள்ளி வேலைகளின் அழகையும் பெருமையையும் அமையப் பெற்றிருக்கின்றன.

உபயோகம்

சுத்த வெள்ளிச் சாமான்களையே வாங்குவதன் இலாபம் எவருக்கும் தெரியும். வாங்கும் விலையையும், எத்தனை வருஷம் அந்தச்சாமானின் அழகு அழியாம லிருக்குமென்பதையும் வகுத்துப் பார்த்தால், "சிறந்த சாமான்களே மலிந்த சாமான்களுமாகும்" என்னும் பழமொழி பழுதாகாததை யறிவீர்.

குடும்பத்து வெள்ளிச் சாமான்கள் யாவராலும் மனங்கனிந்து பாராட்டப்படுவன. அவைகளைக் காணுந்தோறும் முன்னை நினைவுகள் பல ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்வது இயற்கையே. தலைமுறை தலைமுறையாய் இவைகளையும் இவைகளை வாங்கிவைத்த உங்களையும் கொண்டாடுவார்.

வாங்கி நீங்கள் வைத்து மகிழ்வதற்கும் நன்கொடை அளித்து மகிழ்விப்பதற்கும் உரிய எங்கள் வெள்ளிக்கலன்களை மனமுவந்து காட்டுகின்றோம், வாருங்கள்.

வெகுமதியளிக்க

வெள்ளிக் கலன்கள் உபயோகத்தாலும் அழகாலும் தனக்குச் சமானமில்லாத் தனிப்பெருஞ் சிறப்பாலும் அழியாத் தன்மையாலும் மிகப் பொருத்தமானவை.

கப் காஸ்கெட் தட்டு, அல்லது ஸெட்டாகச் சேர்ந்த சாமான்கள் எங்களிடத்தில் தயாராக இருக்கின்றன. இவைகளிலிருந்து வாங்கிக்கொண்டாலும் சரி, இஷ்டமான மாதிரிப்படி எங்களிடம் செய்வித்துக்கொண்டாலும் சரி-பெற்றுக்கொள்பவர் தம்பொருட்டுக் கவனம் செலுத்தித் தேர்ந்தெடுத்திருக்கின்றீர்கள் என்று உங்களை மிகவும் பாராட்டுவர்.

அளவற்ற சாமான்கள் எங்களிடத்தில் செய்து தயாராயிருக்கின்றபடியால் நீங்கள் வேண்டியதைத் தேர்ந்துகொள்வது வெகு சுலபம். நாங்களும் உங்கள் தேவைக்குத்தக்கபடி எடுத்துத் தருவோம்.

எங்கள் கொள்கை

யோக்கியமாகவும் கவுரவமாகவும் நாங்கள் சரிவரச்செய்து விர்த்தி யடைகின்ற வைர வியாபாரத்தைப்போலவே இந்த வெள்ளிச் சாமான் டிபார்ட் மெண்டையும் நடத்தி வருகின்றோம். ஒருமுறை எங்களிடம் வெள்ளி பொன் கலன்கள் வாங்குபவர் பொருள்களின் தூய்மையையும் அழகையும் கண்டு பின் எங்களிடமே செல்வர்.

எங்கள் எஸ்டிமேட்

எந்தச் சாமான் எந்த மாதிரியில் வேண்டுமானாலும் கேளுங்கள். டிஸைன்களும் எஸ்டிமேட்டும் அனுப்புவோம்.

உங்கள் ஆதரவை வேண்டுகின்ற

ஸூராஜ்மல் லல்லுபாய் & கோ.,

135, பெரிய பஜார் திரிச்சிராப்பள்ளி. | வைர வியாபாரிகள், நகைகட்டுவோர் பொன்வெள்ளிக் கலன்கள் செய்பவர். | **313**, எஸ்பளனேட், சென்னை.

SURAJMAL LALLUBHAI & CO.,

DIAMOND MERCHANTS AND JEWELLERS,
GOLD AND SILVER SMITHS.

135, Big Bazaar, TRICHY. | 313, Esplanade, MADRAS.

வர்த்தமானம்

ஸ்ரீ மீனாட்சி சங்க ஆண்டு விழா:—இச்சங்கத்தின் 3-வது ஆண்டுக்கூட்டம், இலட்சுமிபுரத்தில் பிப்பிரவரி மாதம் 28-ந்தேதி வியாழக்கிழமை மாலை 4மணிக்குத் தேவகோட்டை டிவிஷனல் ஆபீஸரும் காரைக்குடி முனிசிபல் சேர்மனுமான திருவாளர் C. திருவேங்கட முதலியார் தலைமையில் கூடிற்று. பல ஊர்களிலிருந்தும் தனவைசியப் பிரமுகர்கள் வந்திருந்தனர். திரு. இராமசுப்பிரமணியன், கடந்தஆண்டு அறிக்கையைப் படித்த பின்னர்த் திரு. அரு. சோமசுந்தரன் செட்டியார் கல்வி வளர்ச்சியைப்பற்றியும், சாண்டோ-சோமசுந்தரன் செட்டியார், தேகாப்பியாசத்தைப் பற்றியும், குமரன் ஆசிரியர் திரு. சொ. முருகப்ப செட்டியார் தமிழ்நாட்டின் எதிர்கால வாழ்வைப்பற்றியும் முறையே பேசினர். தலைவர் தமது முடிவுரையில் இத்தகைய சங்கங்கள் செட்டிமார் நாடெங்கும் ஏற்பட்டுக் கல்வித்துறையில் வேலைசெய்ய வேண்டுமென்றும், தனவைசியச் சிறுவர்களும் சிறுமிகளும் கற்பிக்கப்படவேண்டுமென்றும் கூறினர். தலைவரும் சங்க அங்கத்தினர்களும், மற்றப் பிரமுகர்களும் புகைப்படமெடுக்கப்பட்டனர். திரு. ந. சொ. அருணாசலன் வந்தனங் கூறக் கூட்டம் இனிது நிறைவேறியது.

***

ஸ்ரீமாந். செல்வக்கேசவராய முதலியாரவர்களுக்கு உருவப்படம்:— 1929ஞு மார்ச்சுமீ 3உ ஞாயிற்றுக்கிழமை மாலை 4-15 மணிக்குச் சென்னைப் பச்சையப்பன் கல்லூரிமண்டபத்தில், ஷை கல்லூரிமாணவர் தமிழ்ச்சங்கத்தின் ஆண்டு விழாவை முன்னிட்டு ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அவ்வமையம் திருவாளர்கள். பொதுஜன சுகாதார இலாகா மந்திரியார் S. முத்தையா முதலியார் அவர்கள், A. இராமசாமி முதலியாரவர்கள் B. A., B. L., இராஜதானிக் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியர் கா. ரா. நமச்சிவாய முதலியார், பச்சையப்பன் கல்லூரிச் சரித்திர போதகாசிரியர், சீனிவாசாசாரியாரவர்கள், ஷை கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியர்கள் மோ. கந்தசாமி முதலியாரவர்கள் B.A.,M.R.A.S, மணி திருநாவுக்கரசு முதலியாரவர்கள்; பச்சையப்பன் உயர்கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் கா. ர. கோவிந்தராஜ முதலியாரவர்கள், D. சாம்பசிவம் பிள்ளையவர்கள் B.A.,L.T (Deputy Inspector of Schools), முதலியவர்களும் மற்றும் பல பண்டிதர்களும் வந்திருந்தார்கள்.

முதலில் புகைப்படமொன்று எடுக்கப்பட்டது. பின்னர் 4-30 மணிக்குத்திருவாளர். கனம் S. முத்தைய முதலியாரவர்களின் தலைமையின்கீழ் கூட்டந்தொடங்கியது. அவைத்தலைவர் அவர்கள் இந்நாள் தமிழ்மொழிக் கேற்பட்டுள்ள பெருமதிப்பைப் பற்றிச் சிறிது நேரம் பேசிப் பின்னர்ப் பச்சையப்பன் கல்லூரியில் சில்லாண்டுகளுக்குமுன் தமிழ்ப் பேராசிரியராயிருந்து காலஞ் சென்ற திருவாளர். திருமணம். செல்வக்கேசவராய முதலியார் M.A, அவர்களின் திருவுருவப் படத்தை அவர்மீது அக்கல்லூரியின் மாணவரும்பிறரும், சிறப்பாகத் தமிழ்மக்களும் வைத்துள்ள அன்புக்கும் பெருமதிப்புக்கும் அறிகுறியாக ஷை கல்லூரியின் மண்டபத்தில் திறந்து வைக்குமாறு திருவாளர். A. இராமசாமுதலியா ரவர்களைக் கேட்டுக்கொள்ளும்படி திருவாளர். சீனிவாசாசாரியார் அவர்களை வேண்டிக்கொண்டனர். திருவாளர். சீனிவாசாசாரியாரவர்கள் காலஞ்சென்ற திருமணம். செல்வகேசவராய முதலியாரவர்களின் சீரிய குணங்களைப் பற்றியும், கல்வித் திறமையைப்பற்றியும் நீண்டதோரு பந்நியாசம்செய்து, பின்னர்த் திருவாளர். A. இராமசாமி முதலியார் அவர்களை ஷை முதலியார் அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைக்கும்படி கேட்டுக்கொண்டனர்.

திருவாளர். A. இராமசாமி முதலியார் அவர்கள் கரகோஷத்தினிடையே எழுந்துநின்று பேசியதின் சுருக்கம் பின்வருமாறு:—

"பெண்மணிகளே, கனவான்களே, யான் தமிழ்மாணவனல்லேன். ஆதலின் திருவாளர். திருமணம். செல்வக்கேசவராய முதலியாரவர்களை யடைந்து கல்வி கற்கும் பெரும்பேறு எனக்குக் கிடைக்கவில்லை. ஆயினும், நான் கிறிஸ்தவக் கல்லூரியில் மாணவனாக இருந்தகாலத்தில் அக்கல்லூரியில் தமிழ்ப் போதகாசிரியர்களாயிருந்த காலஞ்சென்ற திருவாளர் V. G. சூரியநாராயண சாஸ்திரியார் B.A, அவர்களும், ஸ்ரீலஸ்ரீ. சுவாமிவேதாசலம் அவர்களும், என்னுடையதோழர்களும் பச்சையப்பன்கல்லூரித்தமிழ்ப்பேராசிரியர் திருவாளர். திருமணம். செல்வக்கேசவராய முதலியாரவர்களைப் பற்றிப் பெரிதும் புகழ்ந்து பேசக் கேட்டிருக்கிறேன். அப்பெரியார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுக்காக நான் பெரிதும் அவரைப் புகழ்கின்றேன். தெலுங்கு மொழிக்குத் திருவாளர். வீரேசலிங்கம் பந்துலு எவ்வளவு நன்மை புரிந்திருக்கின்றாரோ, அவ்வளவு தமிழ்மொழிக்குத் திருவாளர். திருமணம். செல்வக்கேசவராய முதலியாரவர்கள் புரிந்திருப்பதாக நான் அறிந்து பெருமகிழ் வெய்துகின்றேன். நான் இந்நாள் வரையில் தமிழ்ப் புலவருக்கேனும், நம் நாட்டுப் பிறமொழிப் புலவருக்கேனும் படமொன்றமைத்து இத்தகைய பெருமதிப்புக் காட்டிய கூட்டத்திற்குச் சென்றது மில்லை; அதைப்பற்றிக் கேள்விப்பட்டது மில்லை. இத்திருவுருவப் படத்திறப்புத் தமிழ்ப்பெருமக்களின் எதிர்காலப் பெருமையைக் குறிக்கும்," என்று கூறித் தமிழ்ப் பேராசிரியர் திருவாளர். திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்தனர். பின்னர் அத்திருவுருவப்படத்திற்கு மலர்மாலை சூட்டப்பட்டதும், இராஜதானிக் கல்லூரித் தமிழ்ப்போதகாசிரியர் திருவாளர் கா.ரா நமச்சிவாய முதலியாரவர்கள், திருவாளர். செல்வக்கேசவராய முதலியாரவர்கள் தமிழினிடத்துக் காட்டிய பேரன்பையும், அவரது உரைநடை யெழுதுந் திறத்தையும், கல்வியி லவருக்கிருந்த பேரூக்கத்தையும் பிற குணநலங்களையும் விளக்கினர். பின்னர்ப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் போதகாசிரியர் திருவாளர் மணி திருநாவுக்கரசு முதலியாரவர்கள், திருவாளர். திருமணம் செல்வக்கேசவராய முதலியாரவர்கள் தமிழில் உரைநடையை வளர்க்கத் தாம் பெரிதும் முயன்று பல சீரிய நூற்களை யெழுதியதோடமையாது, தமக்குச் சமையம் வாய்த்தபோதெல்லாம் பிறரையும் அவ்வாறு செய்யும்படி தூண்டி வந்தவரென்றும், அவர் எழுதிய வசன நூலாகிய 'குசேலர்' என்னு நன்னூல் ஒப்பற்ற உரைநடைத் திறத்தை யுடையதென்றும், தமிழ் மாணவர் இப்பெரியாரது திருவுருவப் படத்தை எழுதுவித்து ஷை கல்லூரியின் மண்டபத்தில் திறப்பித்து வைத்தமை பெரிதும் போற்றுதற் குரியதொரு செய்கை யாகுமென்றும் கூறினர். பின்பு அவைத் தலைவருக்கும் திரு. A. இராமசாமி முதலியாரவர்களுக்கும் மலர்மாலை சூட்டி வந்தனோபசாரம் கூறியதும் சபை கலைந்தது.

***

சோக்கலிங்க வித்தியாசாலை:—இவ்வித்தியாசாலையின் இரண்டாவது ஆண்டு விழா பிப்பிரவரி மாதம் 28-ந் தேதி காலை 9 மணிக்குக் கீழச் சிவற்பட்டி சாண்டோ மு. லெ. சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தலைமையிற் கூடியது. அதுகாலை, பள்ளிச் சிறுவர் 'சிவகாமி சரித்திரம்' என்னும் நாடகத்தை நடத்தினர். கோலாட்டம், கும்மிப்பாட்டு முதலிய விளையாட்டுகளும் நடந்தன. சிறுவர்களுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. தலைவர், சிறுவர்கள் தேகப்பயிற்சி செய்யவேண்டுமென்று கூறினர். திரு. இராமசுப்பிரமணியன் வந்தனங்கூறக் கூட்டம் முடிந்தது.

KALANILAYAM.
REG. NO. M. 2324.

கலா நிலயம்

1928 வருஷத்திய பிரதிகள் முழுவதும் பைண்ட் செய்தும் செய்யாமலும் எங்களிடம் கிடைக்கும்.

இதிலடங்கிய முக்கியமான கட்டுரைகள் தொடர்ச்சியாய் வந்தன:—சேக்கிழாரும்திருக்கண்ணப்பரும், கம்பராமாயணம், தமிழ்ப்பாடம், அகப்பொருள் வரலாறு, காந்திமதி யென்னும் செந்தமிழ் நாவல், தேவாரமும் ஐந்திணையும், கிரேக்க தத்துவ சாஸ்திரங்களின் விளக்கம், கார்லைல் ரஸ்கின் எமர்ஸன் முதலிய ஆங்கிலப் புலவர் கட்டுரைகளின் மொழி பெயர்ப்பு, இன்னும் பல விஷயங்கள் அவ்வப்போது வந்தவை எண்ணிறந்தன.

விலை:—தபால் சார்ஜ் உள்பட:—

பைண்டு செய்யாதது
உள் நாட்டிற்கு ரூ 8-0-0.
வெளி நாட்டிற்கு 9-8-0.

ஆப்லெதர் கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 10-0-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-8-0.

புல் காலிகோ கில்டு பைண்டு,
உள் நாட்டிற்கு ரூ. 9-8-0.
வெளி நாட்டிற்கு ரூ. 12-0-0.

வேண்டுவோர் முன்னதாகப் பணம் அனுப்பிக் கேட்கவும்.

மானேஜர்,
11, வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

உ

வியாஸங்கள்.

வியாஸங்கள் ! வியாஸங்கள்! !

வியாஸங்கள் மிக எளிதில் அறிந்து அதன்படி நடந்து நன்மையடையக் கூடியவிதமாக எழுதப்பட்டுள்ளன.

கீழ்கண்ட வியாஸங்கள் ஒவ்வொரு தமிழரும் வாங்கி வாசித்துப் பயனடையக் கூடியனவாகும். நம் முன்னோர்களுடைய உபதேசங்கள் பலவற்றை நம்மில் பலர் அறியாமலிருக்கிறோம். காரணம், அவையாவும் செய்யுளாக இருப்பதே. இந்த வியாஸங்கள் அச்செய்யுட்களையே பெரும்பாலும் தழுவி வசனமாக எழுதப்பட்டிருக்கின்றன.

	ரூ.	அ.		ரூ.	அ.
அன்பு	0	1	பொது மதம்	0	2
பலவகை மனிதர்	0	1	ஆரூதாரம்	0	2
தவம்	0	1	சந்தேகம்	0	2
பொறுமை	0	1	கற்பு	0	3
இருவினை	0	2	அஸ்தபூஷணம்	0	4
இல்லறம்	0	2	பதினாறு பேறு	0	4
ஆலய வழிபாடு	0	2	என் தந்தையார்	0	6

மேல்கண்ட பதினைந்து புத்தகங்களும் ஒரே தடவையில் வாங்குபவர்களுக்கு ரூபாய் இரண்டுக்குக் கொடுக்கப்படும்.

தபால் சார்ஜ் இனம்.

இன்றே எழுதுங்கள் !

நவீன கதா புத்தக சாலை,
மங்கமாரி வீதி, இரங்கூன்.

189045

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM, C. C. S.

WITH AN APPRECIATIVE FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particularly of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—
"KALANILAYAM"
11, VELLALA STREET.
Purasawalkam, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)